www.tamilarangam.net

# பாரம்பரிய தாயகப் பிரச்சினையும் முஸ்லிம்களும்

சட்டத்தரணி எம். நிஸார் B.A.

இன்று இனப்பிரச்சினைக்கான தீர்வில் முக்கியபங்கு வகிப்பது பாரம்பரிய தாயகப் பிரச்சினையாகும். வடக்கும் கிழக்கும் இணைந்த பகுதி தமிழ் மக்களின் பிரிக்க முடியாத பாரம்பரிய பூமியாகும் என தமிழ் அரசியல், இராணுவக் குழுக்கள் பலமாக நம்புகின்றன.

வடக்கும் கிழக்கும் இணைந்த பாரம்பரிய தாயகத்தில் முஸ்லிம், சிங்கள மக்களும் கணிசமானளவு வாழ்ந்தாலும் இவர்களின் சட்டரீதியான அந்தஸ்து எப்படியிருந்த போதிலும் பொத்துவில் தொடக்கம் மன்னார் வரையிலான கரையோரப் பூமியானது தமிழ் மக்களின் பூர்வீக வரலாறு, பாரம்பரியம், கலாசாரம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் ஒன்றிணைந்த ஓர் அரசியல் அலகாக இருக்க வேண்டும் என்பதே தமிழ் அரசியல் மற்றும் இராணுவக் குழுக்களின் அபிலாஷையாகும். இந்த அபிலாஷையே இன்று அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நிகழும் பயங்கரமான யுத்தத்தில் அடிப்படையுமாகும்.

வடக்கும் கிழக்கும் இணைந்த பாரம்பரியத் தாயகத்தில் தமிழர்கள் இன்றும் என்றும் கருதிவந்த தொடர்ச்சியான நிலப்பகுதியில் மகாவலி அபிவிருத்தி, புனித பூமி பிரகடனம், புதைபொருள் ஆராய்ச்சி போன்ற பேரினவாத நடவடிக்கைகளை தமிழர்கள் மட்டுமல்ல வட, கிழக்கில் வாழும் முஸ்லிம்களும் பலமாக எதிர்க்கின்றனர். அம்பாறை மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் திட்டமிட்ட அடிப்படையில் அந்நியர் குடியேற்றப்படுவதும் அபிவிருத்தி என்ற போர்வையில் மகாவலி 'சி' பகுதி மூலமாக அந்நியர்களுக்கு காணித்துண்டுகள் வழங்கப்படுவதும் சாதாரண ஒரு நடவடிக்கையல்ல. மாறாக வட, கிழக்கு பாரம்பரியப்பூமியின் சிங்களவர்களின் சனத்தொகையைக் கூட்டி அதில் வாழும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை மக்களின் அரசியல் அதிகாரபலத்தை உடைத்து எதிர்காலத்தில் தமிழ் ஈழம் ஒன்று உருவாவதைத் தடுப்பதே பேரினவாத அரசின் நோக்கமென தமிழ் அரசியல், இராணுவக் குழுக்கள் குரல் எழுப்புகின்ற நேரத்தில் முஸ்லிம்களோ குறிப்பாக கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் 'தமிழ்ஈழம்' உருவாவதைத் தடுப்பது அல்லது ஆதரிப்பதைத்தமது பிரதான இலக்காகக் கொள்ளாது தமது பொருளாதார அபிவிருத்திக்கும் எதிர்காலச் சந்ததிகள் குடியேறி வாழ்வதற்கும் தேவையான நிலப்பகுதிகள் அந்நியரால் ஆக்கிரமிக்கப்படுவதையும் அபகரிக்கப்படுவதையும் பலமாக எதிர்க்கின்றனர். ஆனால் துரதிஷ்டவசமான நிலை என்னவெனில், சிங்களக் குடியேற்றங்களுக்கெதிராக தமது பலமான எதிர்ப்பைக் காட்டுவதற்கு போதுமான அரசியல் உந்து சக்தி ஒன்று இல்லாமல் கடந்த நாற்பது வருடங்களாக அவர்கள் திணறுவதையே தற்கால சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. முஸ்லிம்களுக்கு தனித்துவமான தலைமைத்துவமும், உரிமைகளும் பெற்றுக் கொடுக்க வந்த தனி வழிக்கட்சிகள் கூட இந்தத் திட்டமிட்ட குடியேற்றங்களை எதிர்ப்பதைத் தமது பிரதான இலக்காகக் கொள்ளாது, வேறு ஏதோ ஆதாயங்களுக்காக இயங்கிக் கொண்டிருப்பது போல தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன

தமிழ், முஸ்லிம் சிறுபான்மைத் தேசிய இனங்கள் தமது அரசியல் அதிகாரங்களைப் பேணிப்பாதுகாப்பதற்கும், பாரம்பரிய கலாசாரங்களை கடைப்பிடிப்பதற்கும் பொருளாதார அபிவிருத்தியடைவதற்கும் தனி அரசியல் அலகு (Seperate political unit) ஒன்று வேண்டுமென்றும் அதுவே வடக்கும் கிழக்கும் இணைந்த மாநிலமெனவும் அடையாளப்படுத்தி வருகின்றன. ஆனால், அண்மைக் காலங்களில் எல்.ரி.ரி.ஈ. எடுத்த ஒரு சில நடவடிக்கைகளின்படி தமிழ், முஸ்லிம் சமூகங்கள் இரண்டும் வடக்கையும் கிழக்கையும் தமது வாழ்விடமாக பல நூற்றாண்டு காலமாகக் கருதி வாழ்ந்து வருவதாலும் இவ்விரண்டு சமூகங்களும் தமிழைத் தாய் மொழியாகக் கைக்கொண்டு வருவதாலும் வடக்கும் கிழக்கும் இணைந்த நிலப்பகுதி தமிழ் பேசும் மக்களின் பொதுவான பாரம்பரியத் தாயகம் (Traditional Homeland) என்ற நிலைப்பாட்டுக்கு முற்றிலும் முரணாக வடக்கும் கிழக்கும் முஸ்லிம்களைத் தவிர தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட ஏனையோருக்கு மாத்திரமேயென்ற நிலைப்பாட்டை அதாவது வடக்கும் கிழக்கும் பாரம்பரியதமிழ் தாயகமென்ற (Traditional Tamil Homeland) உறுதியான கோட்பாட்டினைக் கொண்டுள்ளன.

மிதவாத தமிழ் இயக்கங்களைப் பொறுத்தவரையில் வடக்கும் கிழக்கும் பாரம்பரியத்தாயகமென்ற கோட்பாட்டில் வித்தியாசப்படாவிடினும் இவ்விரண்டு மாகாணங்களும் இணைந்த மாநிலமே எந்தவொரு அரசியல் தீர்வுக்கும் அடிப்படை அரசியல் அலகாகவும் (Basic Political Unit) அதன் அடிப்படையிலேயே மத்தியிலிருந்து அதற்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமெனவும் பிடிவாதமாக நிற்கின்றன.

ஆனால் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் வடக்கும் கிழக்கும் இணைந்த மாநிலத்தில் முஸ்லிம்களின் தனித்துவமான அரசியல், கலாசார, பாரம்பரியங்களைப் பேணும் அலகுகளும் இருப்பதாகவும் அவை தமிழர்களின் பாரம்பரியத் தமிழ்த் தாயகத்தின் பகுதிகளாகாவென வாதிடுகின்றனர். மாறாக அவை மத்தியிலிருந்து அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய ஒரு முஸ்லிம் மாகாண சபையின் பிரிக்கமுடியாத பகுதிகள் எனக் காரணம் கூறுகின்றனர்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்கள் இலங்கையின் சனத்தொகையில் தமிழர்களின் சனத்தொகையில் நான்கில் மூன்று பங்கினராக இருக்கும் நிலையில் அவர்கள் எடுக்கும் எந்த முக்கியத்துவம் வாய்ந்த முடிவுக்கும் வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற நான்கில் ஒரு பகுதி இலங்கைத் தமிழர்கள் முழு ஆதரவும் வழங்குகின்றனர். காரணம் வடக்கு-கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற தமிழர்கள் தமக்கு பாரம்பரியத்தாயகம் வடக்கும் கிழக்கும்தான் என நம்புவதாகும். எடுத்துக்காட்டாக கடந்த 83 ஜுலை கலவரத்தில் வடக்கு-கிழக்குக்கு வெளியே வாழ்ந்த தமிழர்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி கப்பல் மார்க்கமாக எடுத்துச் செல்லப்பட்டனர். கொழும்பு 'செட்டி' வம்சத்தினர் கூட பல நூற்றாண்டுகள் கொழும்பில் வாசம் செய்தும் கூட இவர்களும் கூட யாழ்ப்பாணத்தை நோக்கி பாதுகாப்புக்காகச் சென்றனர்.

மலையகத்தமிழர்களைப் பொறுத்தவரை தமிழ் அரசியல், இராணுவக் குழுக்கள். தீர்க்கமான முடிவை எடுத்துவிட்டன எனலாம். எப்படி வடக்கும் கிழக்கும் இணைந்த மாநிலம் இலங்கையில் சிதறி வாழும் தமிழர்களுக்கு பாரம்பரியத்தாயகமோ அதேபோல் மலையகத் தமிழர்களுக்கும் அவர்கள் இந்திய வம்சாவழியாக இருந்தாலுஞ்சரி பதிவுப் பிரஜைகளாக இருந்தாலும்சரி அவர்களும் வடக்கிலும் கிழக்கிலும் காணிகள் பெற்று குடியேறலாம் என தமிழ் அரசியல், இராணுவக்குழுக்கள் அனுமதித்துள்ளன.

இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் வடக்கு- கிழக்கு மாகாண சபை, தனது பதவிக்காலத்தில் தமிழ்ப்பகுதிகளில் மலையகத்தவர்களுக்கு காணிகள் வழங்கி, வீடுகளைக் கட்டி குடியேற்றியது.

முஸ்லிம்களின் கண்ணோட்டத்தில், வடக்கும் கிழக்கும் வடக்கிலும் கிழக்கிலும் வதிகின்ற முஸ்லிம்களுக்கு பாரம்பரிய பிரேதசமாகும். வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம்கள் செறிவாய் வாழுகின்ற பிரதேசங்கள் முஸ்லிம்களின் பாரம்பரிய பிரதேசங்களே என ஒரு சில மிதவாத தமிழ் இயக்கங்கள் கூட ஒத்துக்கொள்கின்றன.

> "அண்மையில் முஸ்லிம்களுக்கெதிராக புலிகள் எடுத்துவரும் நடவடிக்கைகள் வடக்கும் கிழக்கும் இணைந்த பகுதி தமிழ் பேசும் மக்களின் பொதுவான பாரம்பரியத் தாயகம் என்றதற்கு முற்றிலும் முரணாக, முஸ்லிம்களைத் தவிர்ந்த தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஏனையோரது பாரம்பரிய தமிழ் தாயகம் என்ற கோட்பாட்டினைக் கொண்டுள்ளதை வெளிப்படுத்தியுள்ளது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> **"வடக்கும் கிழக்கும் முஸ்லிம்களுக்கும் 'தமிழ் பேசும் மக்கள்' என்ற அடிப்படையில் தாயகம் என்பதை தமிழ் அரசியல், இராணுவக் குழுக்கள் ஏற்க மறுக்கின்றன"**

ஆனால் வட-கிழக்கு பிரதேசங்களுக்கு வெளியே வாழ்கின்ற மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்களுக்கு வடக்கும் கிழக்கும் பாரம்பரிய பிரதேசங்களாக அதாவது இரண்டு பிரதேசங்களையும் தமது பாரம்ப்ரிய தாயகமாக வெளியே வதிகின்ற மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்கின்றனரா?

இதுதான் இன்றைய முக்கியமான கேள்வியாகும் சிங்களவர்களின் பாரம்பரிய பிரதேசங்களாகக் கருதப்பட்டு வருகின்ற வடக்கும் கிழக்கும் தவிர்ந்த பிரதேசங்களை தாம் பிறந்து வாழும் பாரம்பரிய தாயகமாகக் கருதியே வாழ்ந்து வருகின்றது. 83 ஜூலையில் தமிழர்களுக்கு ஏற்பட்ட ஒரு சோதனை, இப்பகுதியில் வாழும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டால் கூட, வடக்கு-கிழக்கு பிரதேசங்களுக்கு வெளியே வாழ்ந்த நாலில் ஒரு பங்கு தமிழ் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களான வடக்கையும் கிழக்கையும் நோக்கி புகலிடம் தேடிச் சென்றது போல வடக்கு-கிழக்கு பிரதேசங்களுக்கு வெளியே வாழுகின்ற மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்களுக்கு வடக்கையும் கிழக்கையும் தேடிச் செல்லக் கூடிய மனோநிலையோ அவ்வாறு தேடிவரும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கக் கூடிய பிரதேசங்களாகவோ இன்று அவை இல்லை.

அது மட்டுமல்ல வடக்கும் கிழக்கும் தவிர்ந்த சிங்கள பாரம்பரிய பிரதேசம் அதில் வாழும் முஸ்லிம்களுக்கு ஆகக் கூடிய பாதுகாப்பு வழங்குவது போன்று வடக்கையும் கிழக்கையும் தமது பாரம்பரிய தாயகமாகக் கருதி வாழும் வட-கிழக்கு முஸ்லிம்களுக்கு அவை ஆகக் கூடிய பாதுகாப்பு வழங்கக்கூடிய பிரதேசங்களாக இன்று இல்லை. வடக்கில் பல நூற்றாண்டு காலமாக வாழ்ந்த முஸ்லிம்களும் கிழக்கில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த ஒரு தொகை முஸ்லிம்களும் இன்று தமது பாரம்பரிய பிரேதசங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இன்று புகலிடம் வழங்கிக் கொண்டிருப்பது சிங்கள பாரம்பரிய பிரதேசமாகும்.

இந்தப்பின்னணியில், தமிழ்மக்களிடையே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக வடக்கும் கிழக்கும் இணைந்த மாநில சபை உருவாக்கப்பட்டு அதற்கு மத்தியிலிருந்து

கணிசமானளவு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற ஒருமித்த கருத்து முஸ்லிம்கள் மத்தியிலிருந்து எழும்பவில்லையே என ஒரு சில தமிழ் அரசியல், இராணுவக் குழுக்கள் குறைகூறுகின்றன.

இந்நிலையில், தமிழ் மக்களும் சிங்கள மக்களும் நூற்றுக்கு நூறுவீதம் முரண்படுகின்ற இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இலங்கை முஸ்லிம் சமூகம் ஒன்றுபட்டு ஒருமைப்பட்டான தீர்மானம் எடுக்க திண்டாடிக் கொண்டிருக்கிறது. இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவை சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்க தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் தவறிவிட்டன. இது பேரினவாதத்திற்கு பெரிய சாட்டாகப் போய்விட்டது.

வடக்கும் கிழக்கும் இணைந்தால் அது ஈழத்திற்கு ஒப்பாகும் என்ற பயம் சிங்களவர் மத்தியில் தோற்றுவிக்கப்பட்டுள்ள வேளையில் முஸ்லிம் மாகாண சபையைப் பெறும் நோக்கில் முஸ்லிம் அரசியல் கட்சிகள் வடக்கும் கிழக்கும் இணையவேண்டும் எனக் கருத்து தெரிவிப்பது சிங்களவர் மத்தியில் முஸ்லிம்கள் மீது சந்தேகத்தை ஏற்படுத்திவிட்டது. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு எவ்வளவுக்கு இழுபறியாகிறதோ அதேயளவுக்கு முஸ்லிம்கள்

மீதான ஆத்திரமும் அதிகரிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

இந்நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் வாழும் முஸ்லிம்களின் நலன்களைப் பேண வேண்டுமாயின் இரு நிகழ்வுகள் நிகழவேண்டும்.

அவையாவன;

1) முஸ்லிம்கள் சிங்களமக்களின் அபிலாஷைகளுக்கு முரணில்லாத வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை வெளியிடவேண்டும்.

2) இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை சிங்கள அமைப்புகளோ அல்லது சிங்கள அரசியல் கட்சிகளோ வெளியிட வேண்டும்.

அண்மைக்கால நிகழ்வுகளை நோக்கின் இலங்கை முஸ்லிம் சமூகம் வடக்கும் கிழக்கும் இணைந்த அமைப்புக்குள் முஸ்லிம் மாகாணசபை வேண்டும் என்ற கோரிக்கையிலிருந்து நழுவி கிழக்கும் வடக்கும் தனியான இரு சபைகளாக இருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை ஏறக்குறைய எடுத்துவிட்டன போலத் தோன்றுகின்றது.

இதற்கு உதாரணமாக, அண்மையில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தேசிய முஸ்லிம் பேரவை நடாத்திய இனப்பிரச்சினையும் முஸ்லிம்களும் என்ற தலைப்பில் பேசிய அனைவரும் கிழக்கு தனித்திருக்க வேண்டும் என்ற கோஷத்தினையே எழுப்பினர். இக்கூட்ட இறுதியிலும் கூட கிழக்கும் வடக்கும்வேறாக இருக்க வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேறியதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து தமிழ் அரசியல் கட்சிகள், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி முன்வைத்த வட-கிழக்கு இணைப்பிற்குள் முஸ்லிம் மாகாண சபை பாரம்பரிய முஸ்லிம் பிரதேசங்களை இணைத்து உருவாக்கப்படுவதோடு அதற்குரிய அதிகாரங்கள் மத்தியிலிருந்தே பகிரப்பட வேண்டும் என்ற கோரிக்கை தட்டிக் கழிக்கப்பட்டது. முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் ஜனாப் எம். ஐ. எம். முகைதின் ஆக்ரோஷப்பட்டு வடக்கும் கிழக்கும் தனியாக இருக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டமை நான் மேலே கூறிய கருத்தான முஸ்லிம்கள் படிப்படியாக சிங்களவர் நலன் பேணும் வகையில் நடந்துக் கொள்ளவும் வேண்டும் முடிவுகளை எடுக்கவும் வேண்டும் என்பதற்கு முரண்படவில்லை.

அகில இலங்கை முஸ்லிம் லீக் ஐ. தே. கட்சியுடன் சேர்ந்து சங்கமமாகிவிட்டபடியால் ஐ. தே. க எடுக்கும் முடிவுகளே அக்கட்சியின் முடிவாக அமையப்போகின்றது.

இதற்கிடையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமே வட - கிழக்கு இணைப்பு பற்றியோ அல்லது தமிழ் அரசியல் கட்சிகள் அர்த்தமுள்ள முஸ்லிம் மாகாண சபைக்கு அனுமதி கொடுக்க மறுத்தது பற்றியோ எவ்வித முடிவும் எடுக்காத நிலையில் அரசுடன் சேர்ந்து தொண்டமானைப்போல் சில உரிமைகளையும் சலுகைகளையும் பெறப்போவதாக கூறிக்கொள்கின்றனர்.

சிங்களப் பேரினவாதப் பயமுறுத்தலால் பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தமாகிய இரண்டும் அமுல்படுத்தப்படும் தறுவாயில் கைகழுவிவிடப்பட்டது போல தமிழ் முஸ்லிம் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை வடக்கும் கிழக்கும் இணைந்த அமைப்பும் அதன் கீழ் உருவாக்கப்படும் முஸ்லிம் மாகாண சபையும் தான்வழங்க முடியுமென சகல கட்சிகளும் தீர்க்கமாக முடிவெடுக்கப்படும் பட்சத்தில் சிங்கள பௌத்த பேரினவாதம் மீண்டும் 'ஜாதிக சிந்தனய' என்ற போர்வையில் பேரினவாதத்தை கக்கத்தொடங்கிவிட்டது. இதன் விளைவு இன்னொரு சிங்கள - தமிழ் அல்லது சிங்கள - முஸ்லிம் கலவரத்தை உருவாக்க வித்திடாது எனக்கூறுவதற்கில்லை.

தமிழ் ம்க்களின் மீது 56, 83 களில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள் முஸ்லிம்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டால் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழ்கின்ற 2/3 பங்கு முஸ்லிம்கள் எங்கு போய் தஞ்சமடைவது?

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பரம்பரையாக வாழ்ந்து வருகின்ற முஸ்லிம்களின் உரிமைகளுக்கும் உடமைகளுக்கும் நாளாந்தம் அச்சுறுத்தல் ஏற்படுகின்ற பொழுது எங்ஙனம் சிங்களப் பிரதேசங்களில் நிம்மதியுடன் வாழும் 2/3 பங்கு முஸ்லிம்கள் வடக்கையும் கிழக்கையும் நோக்கிச் செல்ல முடியும்.

இந்நிலையில் அரசுடனான யுத்தத்தில் எல். ரீ. ரீ. ஈ க்கு ஏற்பட்டுவரும் இழப்புக்களுக்கு முஸ்லிம்கள் தான் பொறுப்பு என தவறாக மதிப்பிட்டு வடகிழக்கு முஸ்லிம்களை அவர்களின் பாரம்பரிய தாயகத்திலிருந்து விரட்டியடி

> **"வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களின் பூர்வீக வரலாறு, பாரம்பரிய கலாசாரம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் ஓர் அரசியல் அலகாக இருக்க வேண்டும் என்ற அபிலாஷையே இன்று அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்தத்தின் அடிப்படையாகும்"**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்க முடிவெடுத்துள்ளதாக எல். ரீ. ரீ. ஈ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதன் முதற் கட்டமாகவே மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற தமிழ்ப் பிரதேசங்களில் சிறுபான்மையாக வாழ்ந்த முஸ்லிம்கள் அடித்து விரட்டப்பட்டுள்ளனர். இவ்வாறு விரட்டியடிக்கப்பட்ட 60,000 க்கு மேலான முஸ்லிம்கள் இன்று தஞ்சமடைந்திருப்பது சிங்கள பாரம்பரிய பிரதேசத்தில் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழர்களுக்கு (மலையக தமிழர் அடங்கலாக) வடக்கும் கிழக்கும் பாரம்பரிய தமிழ் பிரதேசம் என பிரகடனம் செய்திருக்கும் தமிழ் இராணு, அரசியல் குழுக்கள் முஸ்லிம் விடயத்தில் வெளிப்படையான எக்கருத்தினையும் வெளியிடவில்லை. உதாரணமாக வடக்கும் கிழக்கும் ஒன்றிணைந்த ஒரே மாநிலமாக பாரம்பரிய தாயகத்தன்மை பேணக்கூடிய ஒரு அமைப்பாக இருக்க வேண்டும் என வட – கிழக்கு முஸ்லிம்களும் வடக்கு – கிழக்கு வெளியே வாழ்கின்ற முஸ்லிம்களும் ஒருமித்த குரலில் கோருகின்ற பொழுது சிங்கள இனவாதத்திற்கு பலிபோகும் 2/3 பங்கு முஸ்லிம்களுக்கு வடக்கிலும் கிழக்கிலும் அடைக்கலம் கொடுப்போம் என எந்த தமிழ் இராணு, அரசியல் குழுவும் இதுவரை பகிரங்கமாக கூறவில்லை.

மாறாக அனைத்திலங்கையிலும் வாழ்கின்ற இலங்கை, இந்திய தமிழர்களுக்கு வடக்கு கிழக்கு இணைந்த மாநிலம் பாதுகாப்பு வழங்கக் கூடிய தனித்தமிழ் தாயகமாகும் என பகிரங்கமாக கூறும் தமிழ் இயக்கங்கள் முஸ்லிம்களுக்கும் வடக்கும் கிழக்கும் "தமிழ் பேசும் மக்கள்" என்ற அடிப்படையில் தாயகம் என்பதை ஏற்கமறுக்கின்றன.

இந்நிலையில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒன்றுபட்டு இனப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வை முன்வைக்கத்தவறிவிட்டனர். அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் கூட இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வையும் முன்வைக்கவில்லை. கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடும் ஒரு முடிவுக்கு வர தவறிவிட்டது.

அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் திரு. மங்கள முனசிங்க அவர்கள் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முகமாக பாராளுமன்ற தெரிவுக்குழு (Parlimentary Select Committee) ஒன்றைத் தெரிவு செய்யும் முகமாக முன்மொழிந்த பிரேரணை பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கான தீர்வாக வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண அமைப்பை தமது உறுப்பினர் முன்வைக்கும் என்பது சந்தேகமாக உள்ளது. அவ்வாறு முன் வைத்தாலும் கூட 2/3 பெரும்பான்மையுடன் அப்பிரேரணை நிறைவேறுமா என்பதும் சந்தேகமாக உள்ளது.

இந்நிலையில் கிழக்கிலங்கையில் முஸ்லிம்களின் மனோநிலையில் மாற்றமேற்பட்டு வருகிறது. காத்தான்குடி ஏறாவூர் பள்ளிவாசல் படுகொலைகள், முஸ்லிம்கள் தமது வயல்களுக்குச் சென்று தொழில் செய்யமுடியாத நிலை, முஸ்லிம்களின் பொருளாதார வளங்கள் சுவீகரிப்பு போன்ற சம்பவங்களால் முஸ்லிம்களின் மனதில் தமிழ் விரோத உணர்வுகள் மாறாத வடுக்களாக மாறி வருகின்றன. இதன் விளைவாக எதிர்காலத்தில் தமக்கு கிழக்கில் முஸ்லிம் மாகாணசபை கிடைத்தாலும் சரி கிடைக்காவிட்டாலும் சரி வடக்கும் கிழக்கும் இணைந்த எந்த ஒரு அமைப்பையும் போர்க்குணம் கொண்டு எதிர்க்கக்கூடும். இம்மாற்றத்தை மத்தியிலிருக்கும் எந்தவொரு சிங்கள பேரினவாத அரசும் வரவேற்கும். இதை தமக்குச் சாதகமாக பாவித்து ஏற்கெனவே ஒத்தி வைக்கப்பட்டிருக்கும் வட – கிழக்கு இணைப்பை பிரிக்கும் அல்லது நிரந்தரமாக்கும் சர்வசன வாக்கெடுப்பை அரசு நடாத்தி வடக்கையும் கிழக்கையும் பிரித்து இருநிர்வாகத்தின் கீழ் செல்ல அனுமதிக்கக் கூடும் இது நடந்தால் பலவருடங்களாக தமது நியாயமான உரிமைகளுக்காகப் போராடிவரும் தமிழ் இராணுவ, அரசியல் குழுக்களுக்கு பலத்த தோல்வியாக முடியும். ஏற்கெனவே இருக்கும் எல்லாவற்றையும் இழந்து சொல்லொண்ணாத் துன்பம் அனுபவிக்கும் தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையும் இல்லாமல் போகும் தமிழ் மக்களின் நீண்டகாலப் போராட்டம் சிதறிப்போய்விடும். இந்நிலைமை ஏற்பட்டதற்கு தமிழ் இராணுவக் குழுவான எல். ரீ. ரீ. ஈ யே முழுப்பொறுப்பை ஏற்கவேண்டும். எனவே தமிழ் மக்களின் ஆகக்குறைந்த பட்ச கோரிக்கையான வடக்கும் கிழக்கும் இணைந்த அமைப்பை வென்றெடுக்க பின்வரும் வழிவகைகளை தமிழ் இயக்கங்களும் எல். ரீ. ரீ. ஈ யும் எடுக்கவேண்டும்.

1. வடக்கும் கிழக்கும் இணைந்த அமைப்பின் கீழ் முஸ்லிம்களின் பாரம்பரிய பிரதேசங்களையும் அதற்குரிய பொருளாதார வளங்களையும் உள்ளடக்கியதான அமைப்பொன்றை ஏற்படுத்தி அதற்கு மத்தியிலிருந்து கணிசமான அளவு அதிகாரம் பகிர்ந்தளிக்கபட தமிழ் குழுக்கள் இசைய வேண்டும்.

2. சிங்கள பாரம்பரியப் பிரதேசங்களில் அடைக்கலம் கோரி அல்லல்படும் வடக்கு – கிழக்கு முஸ்லிம் அகதிகள் மீண்டும் திரும்பி வந்து தமது பழைய இடங்களில் வாழ எல். ரீ. ரீ. ஈ அனுமதிக்க வேண்டும்.

3. வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம்களிடமிருந்து அபகரித்த பொருளாதார வளங்களையும் சொத்துக்களையும் மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும்.

4. வடக்கு – கிழக்கு பிரதேசங்களில் முஸ்லிம்கள் தமது வழமையான சமூக, கலாசார, அரசியல் நடவடிக்கைகளை சுதந்திரமாக பின்பற்ற அனுமதிக்க வேண்டும்.

இக் கட்டுரை தொடர்பாக இரண்டு குறிப்புகளை எழுத வேண்டியதாகிவிட்டது. ஒன்று: இக்கட்டுரை அச்சுக்குப் போகத் தயாரானபோது வவுனியாவிலிருந்து கிடைத்த தகவலொன்று கூறுகிறது: கடந்த சனியன்று (ஜனவரி 16) யாழ் குடாவில் எஞ்சியிருந்த முஸ்லிம் குடும்பங்களில் நாலாகு குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் அங்கிருந்து புலிகளால் விரட்டப்பட்டுள்ளனர். இவர்கள் சுன்னாகத்தில் வசித்து வந்தவர்கள். இறைச்சி வியாபாரம் இவர்களது தொழில். சுன்னாகப் புலிப் பொறுப்பாளர் இவர்களை வாகனத்தில் ஏற்றி வந்து தாண்டிக்குளத்தில் விட்டுவிட்டு வவுனியாவுக்கு அப்பால் போகுமாறு விரட்டியுள்ளார். உடுத்த உடையுடன் மட்டுமே தாம் ஏற்றி வரப்பட்டதாக ஸியாகத் அலி (42 வயது), ரஹ்மதுல்லா (36 வயது) ஆகியோர் கூறுகின்றனர். தமிழ் ஈழத்தில் முஸ்லிம்களுக்கு இடமில்லை என்ற புலிகளின் கோட்பாட்டின்படி ஏறத்தாழ ஒரு வருடத்திற்கு முன்னர் வடக்கிலிருந்து 60,000க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் விரட்டப்பட்டதும் இன்னமும் அவர்கள் அகதி வாழ்வையே வாழ்ந்து வருகிறார்கள் என்பதும் ஒரு துயரம்!

கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களுக்கு செய்தவற்றை செய்துவருபவற்றை தமிழ் மக்களும், தமிழ் அரசுகளும் முஸ்லிம் மக்களுக்கு செய்யக்கூடாது' என்றும்,

அவ்வாறு 'முஸ்லிம் மக்களை அடித்துத் துரத்திவிட்டு உருவாக்கப்படும் ஈழம் இஸ்ரேலாகத் தான் இருக்க முடியுமே தவிர ஈழமாக இருக்க முடியாது' என்றும்,

"பலஸ்தீனியரை இஸ்ரேல் இவ்வாறு தான் வெளியேற்றியது. ஆனால் பலஸ்தீனியரின் சுயநிர்ணய உரிமைப் போரை நசுக்க முடியவில்லை. இஸ்ரேலும் தன்னுடைய 'பாதுகாப்பை' உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை" என்றும்

எனவே மொத்தத்தில் இது ஈழத்தின் தேசியத் தற்கொலையே என்றும் சரிநிகர் குறிப்பிட்டிருந்தது. இன்றும் சரிநிகர் கூற விரும்புவது அதைத்தான்.

இது ஒரு ஈழத்தின் தேசியத் தற்கொலையே!

இரண்டாவது விடயம் என்னவென்றால், வெளியாகிற இந்தக் கட்டுரை பத்திரிகைச் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதாகக் கூறிக்கொள்கிற முன்னணித் தினசரிகளுக்கெல்லாம் கட்டுரையாளரால் அனுப்பப்பட்டு அவர்களின் 'பத்திரிகா தர்மத்திற்கமைய' பிரசுரிக்கப்படாது போய் இறுதியாக இப்போது சரிநிகரில் பிரசுரமாகிறது என்பது.

வாழ்க கருத்துச் சுதந்திரமும், பத்திரிகா தர்மமும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மேற்கூறிய முடிவுகளை வெளியிட எல். ரி. ரி. ஈ இனதும் மற்றைய தமிழ் இராணுவ அரசியல் குழுக்களினதும் மனோநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அவர்கள் நீண்டகாலமாக பின்பற்றி வரும் முஸ்லிம் விரோத சிந்தனைப்போக்கிலும் கொள்கையிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். தமிழை தாய் மொழியாகக் கொண்ட கிறிஸ்தவர்களையும் பௌத்தர்களையும் எவ்வாறு அன்னியோன்னியமாக நடாத்துகிறார்களோ அவ்வாறு முஸ்லிம்களை புரிந்துகொண்டு நடத்த வேண்டும். முஸ்லிம்களுடன் அதிகாரத்தை பகிர்ந்து அவர்களையும் சமமாக மதித்து நடக்கப்பழகிக் கொள்ளவேண்டும். கடந்த நாற்பது வருடங்களாக சிங்கள பேரினவாதத்திடமிருந்து தாம் பெற்ற அநீதியான இனவாதரீதியான அனுபவங்களை முஸ்லிம்களிடம் திணிக்கக்கூடாது.

இவை எல்லாவற்றிற்கும் தமிழ் மக்களின் அடைப்படை சிந்தனையில் மாற்றம் ஏற்படல் வேண்டும். அதாவது வடக்கும் கிழக்கும் தமிழ் பேசும் அனைவருக்கும் உரித்தான பாரம்பரிய பிரதேசம் என பிரகடனப் படுத்த வேண்டும். தமிழ் தாயகம் தனித்தமிழ்ழம் போன்ற இனவாத கோஷங்களை களைய வேண்டும்.

இவ்வாறான போக்குகள் நிச்சயமாக சிங்கள பேரினவாதத்திற்கு பேரிடியாக முடியும். வடக்கு - கிழக்கு உட்பட முழு இலங்கையிலும் பலமானதும் ஆரோக்கியமானதுமான ஒரு தமிழ், முஸ்லிம் சமுதாயம் உருவாகவும் மீண்டும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் அன்னியோன்னியமாகவும் சமாதானத்துடனும் வாழ அதற்குரிய வழிவகைகளை தேடுவோம்.

சரிநிகர் (ஜனவரி 1992)

---

## தமிழர்களை முஸ்லிம்கள் காட்டிக்கொடுத்தனரா?

அண்மைக்காலமாக அரச - புலிகள் மோதல் பலமடைந்து வரும் நாள் கிழக்கில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் நிலை கொண்டிருந்த புலிகள் புறமுதுகு காட்டியது அனைவருக்கும் தெரியும். தற்போது அப்பாவி முஸ்லிம்களை மறைந்திருந்து தாக்கி வரும் புலிகள் அதனை நியாயப்படுத்த முஸ்லிம்கள் தமிழர்களை 'புலிகள்' என இலங்கை இராணுவத்தினருக்கு காட்டிக்கொடுத்தனர் எனும் பழியைப் போடுகின்றனர்.

இலங்கையில் பல காலங்களாக தமிழ் முஸ்லிம் நல்லுறவு பேணப்பட்டு வந்தது. ஆனால் ஆயுதந்தாங்கிய தமிழர் பலர் தமதுள்ளங்களில் இனவாதத்தை நிரப்பி முஸ்லிம்களுக்கெதிரான அடாவடித்தனங்களில் இறங்கியதன் விளைவாகவே தமிழ் முஸ்லிம் நல்லுறவு சிதைந்தது.

1990 ஜூன் மாதம் அரசுடன் புலிகள் மோதிக்கொண்டதனால் [illegible] மாணவர் பாதிக்கப்பட்டனர். அப்பாவிகளும் தாக்கப்படுவது இத்தகைய போர்களில் தவிர்க்க முடியாததுதான். பல பயங்கரவாதிகள் பொதுமக்களுக்குள் மறைந்து கொள்வதனால் இத்தகைய நிலை ஏற்படலாம். ஆனால், முஸ்லிம்கள் தமிழர்களைக் காட்டிக்கொடுத்தனர் என்பது உண்மை எதுவென தெரிந்து கொள்ளவிடாமல் வீசப்படும் அபாண்டமாகும். சமூகத்துக்குக் கட்டுப்படாத சில முஸ்லிம் வாலிபர்கள் இராணுவத்துடன் ஒத்துழைத்திருக்கலாம். அதனை வைத்து முழு முஸ்லிம்கள் மீதும் பழி போடுவது அறிவற்ற செயலாகும். எல். ரி. ரி யினர் வட கிழக்கில் ஆட்சியிலிருந்த போது கூட முஸ்லிம்கள் [illegible] நடந்துகொண்டனர். அப்போது சில தமிழர்கள் அப்பாவி முஸ்லிம் வாலிபர்களை 'ஆயுதந்தாங்கியோர்' என காட்டிக்கொடுத்த காரணத்தால் புலிகள் அவர்களை பிடித்துச்சென்றனர்.

தமிழர் சிலர் இவ்வாறு காட்டிக்கொடுத்ததற்காக முழு தமிழ் சமூகத்தின் மீதும் முஸ்லிம்கள் பழி சுமத்தினரா? இல்லையே! அதே போல் புலிகளுடன் முஸ்லிம் சமூகத்தின் சில முனாபிக்கள் இணைந்து செயற்பட்டது அனைவருக்கும் தெரியும், அரசுக்கும் புரியும். அதற்காக இலங்கை இராணுவம் முழு முஸ்லிம்கள் மீதும் பழியைப்போட்டு அவர்களைத் தாக்கினரா? எத்தனை நியாயமாய் அவர்கள் நடந்து கொண்டனர்.

எந்த சமூகத்திலும் கட்டுக்கட்டுப்படாத சிலர் இருக்கத்தான் செய்வர். அதற்காக முழு சமூகத்தையும் குற்றம் காட்டுவது விவேகமானதல்ல. உண்மையில் கிழக்கு முஸ்லிம்கள் இராணுவத்தின் உதவியை நாடியிருந்தால் இந்நேரம் கல்முனை தமிழ்ப்பகுதி, காரைதீவு போன்றவைகள் பெருந்தாக்குதலுக்குள்ளாகியிருக்கும். ஆனால் முஸ்லிம்கள் பொறுமையைக் கடைப்பிடித்தனர். 1985 காரைதீவுச் சம்பவத்தில் தாம் [illegible] அவர்கள் [illegible]. அதுமட்டுமல்ல, இராணுவ [illegible] போன்ற முஸ்லிம் [illegible] புகுந்த போது [illegible] முஸ்லிம்கள் உதவியதையும் காணக்கூடியதாக இருந்தது.

இவற்றையெல்லாம் உணராமல் புலிகள் முஸ்லிம்களை கொள்ளை, கொலைகள் செய்து வருகின்றனர். இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமான அப்பாவிகள் கொல்லப்பட்டுள்ளனர். இத்தகைய [illegible] செயல்களைப் பொறுக்க முடியாமல் சில முஸ்லிம் வாலிபர் கொதித்தெழுந்து பதில் நடவடிக்கையில் ஈடுபடலாம். அதற்காக அவர்களைக் குறை கூறவும் முடியாது. ஏனெனில் சிங்களப் பேரினவாதிகளின் அடக்குமுறையைப் பொறுக்க முடியாமல்தான் தமிழ் இளைஞர் ஆயுதம் ஏந்தினர். தமிழ்ப் பேரினவாதமும் அவ்வாறே செயற்படும் போது முஸ்லிம் இளைஞர்களும் கொதித்தெழுவது நியாயமானதே! ஆகவே தமிழ் மக்கள் முஸ்லிம்களைப் புரிந்து கொள்வது அவசியத்தேவையாகும். முஸ்லிம்கள் மீது வீண் பழிகளை சுமத்தி அவர்கள் மீது அடக்குமுறைகளை அவிழ்த்து விடுவதனால் இவ்விரு சமூகங்களுக்குமிடையில் இடைவெளி மேலும் பெரிதாகின்றது. இந்த நாட்டைப் பொறுத்தவரை தமிழர்களும் முஸ்லிம்களும் மோதிக்கொள்வதனால் எதுவித உரிமைகளையும் பெறப்போவதில்லை. இதனால் [illegible] வேறு எதுவும் பிரயோசனமில்லை என்பதை அனைத்து தமிழ் இயக்கங்களும் உணர்ந்து செயற்பட வேண்டும். ஒருவர் பிறரை மதிப்பதன் மூலம் தமிழ் - முஸ்லிம் உறவை மீண்டும் புதுப்பிக்க முனைவோம்.

- [illegible]

வெளியீடு : [illegible]

www.tamilarangam.net



சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை

# பல தரப்புகளில் மனித உரிமை மீறல்கள்

அரசதரப்பில் மனித உரிமைகள் மீறலுக்குப் பொறுப்பாக இருப்பவர்கள் 1.ராணுவம், 2.பொலிஸ், 3.விசேட அதிரடிப் படை. இவர்களைவிட கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் 'இனந்தெரியாத குழுக்கள்' இயங்குகின்றன. இந்த 'இனந்தெரியாத குழுக்கள்' அரச 'கொலைக் குழுக்கள்' (Death Squads) போன்றே இயங்குகின்றன.

அ' கதி முகாம்களையும் உத்தியோகபூர்வமாக பொறுப்பெடுத்துள்ளனர். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் (PLOTE) வவுனியாவில் இயங்குகின்றனர். மட்டக்களப்பிற்கு தமிழீழ விடுதலை இயக்கத்தினர் (TELO) அனுப்பப் பட்டிருக்கிறார்கள். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தந்த தகவலின்படி 112 தமிழீழ விடுதலை

இலங்கையின் தொடர்ச்சியான துயரங்களுக்குக் காரணமான பல்வேறு அரசியற் குழுக்களையும் பற்றி ஒரு 44 பக்க அறிக்கை ஒன்று கடந்த செப்டம்பர் மாதம் சர்வதேச மன்னிப்புச் சபையால் வெளியிடப்பட்டுள்ளது. 'மக்களுக்காகவே நாம்' என்ற கோசத்துடன் இயங்கும் பலதரப்பினரையும் பற்றிய உண்மைகள் இந்த அறிக்கையில் வெளியாகியுள்ளன. அறிக்கையின் சில பகுதிகள்:

முஸ்லிம் ஊர்காவல் படையும் புலிகளுக்கெதிரான பல தமிழ்க்குழுக்களும் ராணுவத்தோடு இயங்குகின்றன. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP) உறுப்பினர்கள் ஊர்காவற்றுறையில் இலங்கை ராணுவத்துடன் பணிபுரிகிறார்கள். அத்துடன் கொழும்பில் விடுதலைப்புலிகள் என்று சந்தேகிக்கப்படுபவர்களை அடையாளம் கண்டு பாதுகாப்புப் படைகளிடம் ஒப்படைக்கின்றனர். மேலும், கொழும்பில் உள்ள சில

இயக்க உறுப்பினர்களுக்கும், 146 தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினர்களுக்கும், அதேயளவு எண்ணிக்கையிலான EPDP உறுப்பினர்களுக்கும் ஆயுதம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களனைவரும் ராணுவத்தின் நேரடி அதிகாரத்தின் கீழேயே பணிபுரிகிறார்கள் என்று மன்னிப்புச் சபைக்கு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## முஸ்லிம் ஊர்காவற்படை

சென்ற வருடம் ஒகஸ்ட் மாதம் முஸ்லிம் ஊர்காவல் படைக்கு அரசு ஆயுதங்கள் வழங்கியது. இரண்டாயிரம் பேருக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன. வடக்கு கிழக்கு எல்லையோரப் பகுதிகளில் மொத்தம் 23,000 சிங்கள ஊர்காவல் படையினருக்கும் அரசு ஆயுதம் வழங்கியுள்ளது. 'பொதுமக்களுக்கு ஆயுதம் வழங்குவது' என்ற அரசின் கொள்கை கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இனக்குழுமங்களிடையே வன்முறையையும் கசப்பையும் அதிகரித்துவிட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினருடன் ஒத்துழைத்துவரும் முஸ்லிம்கள் தமிழர்களின் விபரப் பட்டியலைப் படையினருக்கு வழங்குவதாகவும் இந்தப் பட்டியல்களில் இருந்தே பயங்கரவாத சந்தேக நபர்களின் தெரிவு இடம்பெறுவதாகவும் சொல்லப்படுகிறது. இந்தப் பட்டியல்களில் தமிழ் அரசாங்க ஊழியர்களும், ஏனைய படித்த தமிழர்களும் இருந்தனர். உள்ளூர்ச் சண்டைகளின் விளைவான கோபதாபங்களே இத்தகைய பட்டியல்களின் பின்னணி என்று நம்பப்படுகிறது.

தமிழர்களைத் தடுத்துவைத்துப் பின்னர் பொலிசிடம் கையளிக்கும் வேலையையும் முஸ்லிம் ஊர்காவல் படையினர் செய்துள்ளனர். வீரமுனையைச் சேர்ந்த திருநாவுக்கரசு, ரவி, ராசன், இலங்கேஸ்வரன் ஆகிய நான்கு ஆசிரியர்கள் திருக்கோயிலில் உள்ள தங்களுடைய குடும்பங்களைப் பார்க்கச் சென்றுகொண்டிருந்தபோது முஸ்லிம் ஊர்காவல் படையினரால் தடுத்து வைக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் (செப்டம்பர் 1990). அவர்கள் நால்வரும் 'புலிகள்' என்றும் அவர்களைப் பற்றி விசாரிப்பதில் எவ்வித பிரயோசனமுமில்லை என்றும் தேடிச் சென்றவர்களுக்குச் சொல்லப்பட்டது. இத்தகைய பதில்கள் ஆட்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்பதையே பொதுவாக அர்த்தப் படுத்துகிறது.

பொத்துவிலைச் சேர்ந்த கலாநிதி என்பவரும் இவ்வாறே காணாமல் போயுள்ளார். பொத்துவிலில் 160 தமிழர்களைக் கொன்றதாக விசேட அதிரடிப்படை அதிகாரி ஒருவர் சொன்னதாகத் தெரிவிக்கப்பட்ட போதும் கலாநிதி அவர்களில் ஒருவரா என்பது தெரிவிக்கப் படவில்லை.

இந்த வருடம் பெப்ரவரி மாதம் கொழும்பிலிருந்து வாழைச்சேனையூடாக மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த தமிழ்ப் பயணிகள் பஸ் ஒன்றை முஸ்லிம் ஊர்காவல் படையினர் ஏறாவூரருகில் தாக்கினர். ஏழு பயணிகள் கொல்லப் பட்டனர். பலரைக் காணவில்லை. இச்சம்பவம் பெப்ரவரி மாதம் சதாம் ஹுசைன் கிராமத்தில் இரண்டு முஸ்லிம்களை விடுதலைப் புலிகள் கொன்றமைக்குப் 'பழிக்குப் பழி' என்று தெரியவருகிறது.

## மாயமாய் மறையும், மனிதர்

யூன் 1990இல் இருந்து இன்றுவரை கிட்டத்தட்ட 3,000 தமிழர்கள் 'காணாமல்' போய்விட்டார்கள் என்று அறிவிக்கப்படுகிறது. இதைத் தவிர ஒக்டோபர் 1990 அளவில் அம்பாறை மாவட்டத்தில் மாத்திரம் 3000 தமிழர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யுத்தத்தில் கொல்லப்பட்டோ, காணாமல் போயோ உள்ளனர். வவுனியா, மன்னார், ஊர்காவற்றுறை பகுதிகளில் இருந்தும் 'காணாமல் போனோர்' பற்றிய விபரம் மன்னிப்புச் சபைக்குக் கிடைத்துள்ளது. பாதுகாப்புப் படையினரால் கொண்டு செல்லப்படுவோர், சுட்டோ வெட்டியோ அல்லது எரித்தோ கொல்லப் படுகிறார்கள். இவ்வருடம் பெப்ரவரி மாதம் விஜயபாகு படைப்பிரிவின் 45 ராணுவத்தினர் விடுதலைப் புலிகளால் கொண்டச்சியில் கொல்லப் பட்டனர். பதிலடியாக நாலு ஆசிரியர்களை பாடசாலை விட்டு வரும் வழியில் ராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். இதுபோன்றே மார்ச் 1991ல் மட்டக்களப்பு இருதயபுரத்தில் பழிக்குப் பழியாக 11பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

## தலையற்ற உடல்கள்

கறுப்பு நாகம் (Black Cobras) என்று கூறப்பட்ட ஒரு குழுவால் மட்டக்களப்பில் நிகழ்த்தப்பட்ட தலைவெட்டிக் கொலைகளைப் பற்றி மன்னிப்புச் சபைக்குப் பாதுகாப்பு அமைச்சு தகவல் தருகையில் இந்தக் கொலைகளுக்கு புலிகளுக்கு விரோதமான ஒரு இயக்கமே காரணம் என்று அறிவித்துள்ளது. ஜனாதிபதி நேரடியாகத் தலையிட்ட பிற்பாடுதான் இந்தக் கொலைகள் மட்டக்களப்பில் நின்றுவிட்டன என்று அறிகிறோம்.

## புலியெடுத்த பலிகள்


இந்தியப் படை வெளியேறிய காலத்திலிருந்து மறுபடி இலங்கை ராணுவத்துடன் மோதல் ஆரம்பமாகும்வரை கண்மூடித்தனமான கைது, தடுத்து வைத்தல், சித்திரவதை, கொலைகள் என்பவற்றில் புலிகள் ஈடுபட்டு வந்துள்ளனர். பணத்திற்காக முஸ்லிம் வர்த்தகர்கள் உட்பட பலர் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர்.

துணுக்காயிலுள்ள புலிகளின் சிறைச்சாலை பற்றிய தகவல்களையும் மன்னிப்புச் சபை அங்கிருந்து விடுதலை பெற்றுள்ளது. நவம்பர் 1990இல் 28முஸ்லிம் வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டனர். ஒருவர் கொல்லப் பட்டதாகவும், மூவர் விடுதலை செய்யப் பட்டதாகவும் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளால் கொல்லப் பட்டவர்களுள் புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்களில் இருந்தோரைவிட, புலிகளின் கட்டளைக்குப் பணியாதோரும் அடங்குவர்.

## துணுக்காய்ச் சிறை

சர்வதேச மன்னிப்புச் சபை இந்த வருடம் யூன் மாதம் துணுக்காய்ச் சிறையில் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்ட ஒருவரைச் சந்தித்தது.






ஏப்ரல் மாதம் 1990ஆம் ஆண்டு மூன்று விடுதலைப் புலிகள் மதில்பாய்ந்து சென்று அவரைக் கண்களைக் கட்டி அழைத்துச் சென்றார்கள். ஒன்பது நாட்கள் வேறும் 40 - 45 பேருடன் அவர் தடுத்து வைக்கப் பட்டிருந்தார். ஒன்பதாம் நாள் துணுக்காய்க்கு அனுப்பப் பட்டார். துணுக்காய்ச் சிறை நெல் சந்தைப்படுத்தும் சபையின் கட்டிடங்களில் அமைக்கப் பட்டிருந்தது. ஒரு பெரிய கட்டிடத்தில் 3அடி X 2அடி அளவுள்ள இடம் நிலத்தில் பெட்டி போல வரையப்பட்டிருந்தது. ஒவ்வொரு கைதிக்கும் ஒவ்வொரு 'பெட்டி' ஒதுக்கப் பட்டிருந்தது. இந்தச் சிறுதுண்டு இடத்திலேயே கைதிகள் நிற்பாட்டப் பட்டிருந்தார்கள். ஒன்பது அங்குல இரும்புத் துண்டங்களால் அனைவரது கால்களும் விலங்கிடப் பட்டிருந்தன. பெரிய கட்டிடத்துள் கிட்டத்தட்ட 800பேர் இவ்வாறு சிறை வைக்கப்பட்டிருந்தார்கள்.

'பயங்கர'க் கைதிகளை தனியாக வைத்திருந்தார்கள். இந்தத் தனிச் சிறை என்பது எட்டடி ஆழக் குழிகளாகும். குழிகளை மூடி முட்கம்பி வலை. இவ்வாறு எட்டு நீள்குழிகள் இருந்தன. ஒவ்வொரு குழியிலும் 20, 25 'பயங்கரக்' கைதிகள் இருந்தனர்.

இலங்கை ராணுவத்தைச் சேர்ந்த 16 பேரைக் கச்சாய் முகாமில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு நகங்களுக்கிடையில் ஊசி ஏற்றியதைத் தான் கண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பின்னர் இந்த ராணுவத்தினருக்கு சேறும் சகதியும் வாய்க்குள் ஊட்டப்பட்டு, அறையொன்றில் அடைக்கப்பட்டு மிளகாய் எரித்த புகை அறைக்குட் செலுத்தப்பட்டது.


புலிகளின் கச்சாய்த் தடுப்பு முகாமில் தான் எவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டேன் என்பதையும் அவர் விவரித்தார். அவரும் வேறு நான்கு கைதிகளும் சிறு அறையொன்றில் சுவரைப் பார்த்தபடி நிற்கப் பணிக்கப் பட்டார்கள். பின்னர் பெரிய சத்தியல் ஒன்றினால் எல்லோரும் தாக்கப்பட்டனர். தான் ஏழு முறை தாக்கப் பட்டதாகவும் அதன் விளைவாக இன்றுவரை சுவாசிப்பதில் கஷ்டம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ்ப்பாண 'அடி' யாருக்கு லாபம்?

பிரம்மா



யாழ்ப்பாணம் அடி எப்போது விழும் என இன்று பலரும் கேட்கிறார்கள். எப்போது அது நடக்கும் என்பதை நோக்குவதை விட யாழ்ப்பாணக் கைப்பற்றலில், சிங்கள-பௌத்த வாதத்திற்கும், பிரேமதாசாவிற்கும், இராணு வத்திற்கும், இந்தியாவிற்கும் உள்ள பல்வேறுபட்ட கருத் தோட்டங்களையும் திரை மறைவிலான இராசதந்திர நாடகங்களையும் அவதானிக்க வேண்டியுள்ளது. பிரேமாவின் இராணுவ ஆலோசகர்கள் யாழ்ப்பாணம் கைப்பற்றப் படுவதைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றனர்.

அ. யாழ்ப்பாணத்தின் மையத்தைக் கைப்பற்றிவிட்டால் வட கிழக்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் புலி இயக்க உறுப்பினர்களின் மனோ நிலையில் ஒரு பெரும்பாதிப்பு ஏற்படும். இதனால் ஒரு இராணுவ இயக்கத்திற்கு தேவையான மனோஉறுதி (Morale ) குலைந்துவிடும்.

ஆ. புலிக்கெதிரான ஏனைய இயக்கங்கள் யாழ்ப்பாணத்தின் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் கட்டவிழ்த்து விடப்படும்போது (Unlea shed என்கிற பதம் பயன படுத்தப்பட்டது) புலிகள் இலகுவாக இனங்காணப்பட்டு அழிக்கப்படுவாாகள. இதன காரணமாக 1987 யூலைக்கு முனபிருந்த நிலை மீண்டும் ஏற்படுவதை இம்முறை தடுக்கலாம. ஓரிரு கொில்லாத தாககுதலகளைத் தவிர புலிகளால் குடாநாட்டினுள் வேறொன்றும் செய்ய முடியாத அளவிற்கு ஏனைய இயக்கங்கள மக்கள் மத்தியில் பரவி விடுவா. தமிழ் நாட்டிறகுப் புலிகள செல்ல முடியாமல் உள்ளமை இதறகு இன்னும் சாதகமாக அமையும்.

இ. புலிகள் இயக்கததில் சேருவோரின் வயதெல்லை துாிதமாக வீழ்சசி அடைந்து வருகிறது. தற்போது சேருபவர்கள் பெரும்பாலும் சிறுவா, சிறுமியரே. புலிகளின் விசா முறை யாழப்பாணததை இராணுவம் கைபபறறுவதோடு நீககப்படுமானால் இச்சிறுவா சிறுமியாின பெறறோா அவா்களை குடா நாட்டை விட்டு வெளியே கொண்டு போய்விடுவா். எனவே புலிகளின் ஆட் பலத்தில் மாபெரும் வீழ்ச்சி ஏறபடும். மேலும் புலிகள யாழ்ப்பாணம் வீழ்ச்சியடைந்த பின்னா் தமது போா் பிரசாரத்தையும், வீரப்பாடல்களை ஒலிபரப்புவதையும் கைவிட வேண்டி வரும். இதனால் தமிழ் ஈழப் போராட்டத்தில் மககளுககு நாட்டம் குறைந்துவிடும்.

இங்ஙனமாகப் பிரேமாவின இராணுவ ஆலோசகர்கள கூறுகினற கருத்துக்கள யாவும புலிகள் இனி 1987க்கு முறபட்ட ஒரு நிலைக்குத் திரும்பமுடியாது என்பதை அடிப்படையாகக கொணடவை யாகும். இன்னொரு முக்கியமான கருத்தையும் கவனிக்க வேண்டும். அதாவது பிரபாகரன இன்று ராஜீவ் கொலை வழக்கில் முக்கியமான குற்றவாளியாகக் காணப் பட்டுள்ளதால், பிரபாகரன், இனி என்றும் அரசியல் அந்தஸ்துப் பெற முடியாது. ஆகவே பிரபாகரன புலிகளின் தலைவராக இருக்கும்வரை புலிகள் அரசியல் அங்கீகாரம், அதிகாரம் பெற்று ஒரு நிலைக்கு வருதல் என்பது முடியாத காரியம். சாதாரண புலிகள போராடுவது, என்றோ ஒரு நாள் தாம் ஆட்சி அதிகாரத்திற்கு வரலாம் எனபதறகாகததான. ஆகவே பிரபாகரன தமக்குத் தலைவராய இருக்கும வரை தமக்கு எந்த எதிர்காலமுமில்லை என உணரத தலைப்படும் போது பிரபாகரனுக்குக் கீழ் உள்ளவாகள் தங்கள தலைவரைக் கொன்றுவிடுவாா்கள் அல்லது இச்சிக்கலை உணரும பிரபாகரன தானே சயனைட்டை உட்கொண்டு 'குளோஸ்' ஆகிவிடலாம். (மேற்கண்ட கருத்தை கூறும் ஒருவர் சில சிங்கள சோதிடர்களும்- பிரபாகரன் இந்த வருட முடிவிற்குள சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொள்ளக்கூடும் என்று ஆருடம் கூறியுள்ளதைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை)

யாழ்ப்பாணம் கைப்பற்றப் படுவது பற்றி மேற்கண்ட கருத்துக்களை பிரேமாவின் இராணுவ ஆலோசகர்கள் சிங்கள பௌத்த இனவாத அமைப்புகளுக்கும் தெரிவிககிறாாகள். இன்று இராணுவம் பிரேமாவுடன் கொணடுள்ள தொடா்பைவிட பௌதத பீடங்களுடன் கொணடுள்ள உறவு மிக நெருககமாக உள்ளது. (அணமையில் இராணுவத் தலைமைபீடம் சிங்கள பாதுகாவற் பேரணித் தலைவருக்கு சம்பந்தியாகி உள்ளது புறக்கணித்து விடக்கூடிய ஒரு விடயமல்ல) இராணுவத்திற்கும், பௌத்த பீடங்களுக்கும் (குறிப்பாக மல்வத்தை) சிங்கள பௌத்த அமைப்பகளுக்கும் இடையில் உருவாகியுள்ள இறுககமான உறவைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொளளும் தீவிர முயற்சியில் கொழும்பில் உள்ள இந்திய அதிகாாிகள் இறங்கி யுளளனா். இநதியா இன்று ஏற்படுத்தியும், பலப்படுத்தியும வரும் இந்தப் பதிய உறவு இனப்பிரச்சினையைத தீா்ப்பதற்கும் பெரும் குநதகமாக அமையலாம் என்பதைப்பறறி டெல்லி கவலைப்படுவதாகத் தொியவிலலை. இநதிய அரச அதிகாாிகள் இலஙகை அரசிற்கும், புலிகளுககும் இடையில் ஒரு யுத்தநிறுத்தம் ஏறபட்டு விடக்கூடாது என்பதில் குறியாக இருககினறனா. புலிகளுக்கும் பிரேமாவிற்கும் எதிாபாராத உறவு ஏற்பட்டு விடாமற் தடுப்பதற்குத் தனக்கு இருககும் ஒரேவழி இராணு வத்திறகும் சிங்கள பௌதத வாதிகளுக்கும் உள்ள உறவை தனக்குச் சாதகமாகப்பயன் படுத்திக் கொளவதேயாகும என இந்தியா கணக்குப்போடுகிறது. இதனால் தமிழாின பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணபது பற்றியும் தமிழாின உயிாபாதுகாபபப் பற்றியும் இந்தியா முசசவிட விருபபவிலலை தமிழா எதிாகாலததைப பறறி முனபு மாதநதவறாமல் அறிககை விட்ட டெல்லி இன்று அதைப்பற்றி மௌனம்

www.tamilarangam.net

சாதிப்பதன் மூலம் சிங்கள பௌத்த வாதிகளையும், இராணுவத்தையும் தனபக்கம் கவர்ந்தெடுத்து இலங்கை அரசியலில் தனக்குச் சாதகமாகக் காய் நகர்த்த முற்படுவது முக்கியமான ஒரு திருப்பமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மையத்தைக் கைப்பற்றுவதனால் குறைந்தபட்சம் பத்தாயிரம் பொதுமக்களாவது கொல்லப்படலாம் எனவும் இதற்கு இந்தியா ஆட்சேபனை தெரிவித்தால் தமது குடாநாட்டுப் பிரவேசம் பின்னடையலாம் எனவும் இராணுவத் தலைமைப்பீடம் சிலமாதங்களுக்கு முன்னர் (யாழ்ப்பாண 'அடி'க்கான தயாரிப்புகள் ஆரம்பமான வேளையில்) கவலை கொண்டிருந்தது.

இதன்காரணமாக இராணுவத் தளபதிகள் சில தூதர்கள் மூலம் இந்திய அதிகாரிகளின் கருத்தறியும் முயற்சியில் இறங்கினர். இந்த தூதர்களிடம் இந்தியா சூசகமாகத் தெரிவித்தது என்ன? குடாநாட்டில் பொதுமக்கள் உயிரிழப்பைப் பற்றி நாங்கள் குரல் எழுப்பப் போவதில்லை என்றும், யாழ்ப்பாணம் கைப்பற்றப் படுவதற்கான மறைமுகமான அனைத்து உதவிகளும் செய்யலாம் என்றும் இந்தியத் தரப்பிலிருந்து எடுத்துரைக்கப் பட்டது. இதன் காரணமாகத் தான் இன்று குடாநாட்டில் பொதுமக்கள் பத்தாயிரம் என்ன, ஒரு லட்சம் அழித்தொழிக்கப் பட்டாலும் காரியத்தை முடிக்கலாம் என இராணுவம் நம்பிக்கை பெற்றுள்ளது. தமிழ் இன அழிப்பிற்கு எதிராக உலகில் எழக்கூடிய ஆட்சேபக் குரலையோ அனுதாபக் குரலையோ, இந்தியா அமுக்கிவிடும் என்கிற நம்பிக்கையை இன்று இராணுவம், பௌத்த பீடம், பேரினவாத இயக்கங்கள் ஆகியவற்றின் மத்தியில் டெல்லி ஏற்படுத்தியுள்ளது. சிங்கள முரட்டுப் பேரினவாதம் இன்று கட்டறுப் பீறிட்டெழும் காரணம் இதுதான்.

குடாநாட்டில் நடைபெறக் கூடிய ஒரு இனப்படுகொலையை உலக அரங்கில் மூடிமறைப்பதற்கு இந்தியாவிற்குச் சாதகமாக இன்று புலிகளின் சில நடவடிக்கைகள் அமைந்துள்ளன. புலிகள் ஏனைய இயக்கங்களைக் கொன்றொழிப்பதே தம் நோக்கம் எனப் பிரகடனப் படுத்துவதும், முஸ்லீம்களை கொலை செய்தும், இருப்பிடங்களைவிட்டு விரட்டியடிப்பதும், சர்வதேச அரங்கில தமிழ் இனப் படுகொலைக்கு எதிராகக் குரல் எழுப்பும் நடுநிலை அமைப்புகளுக்கும், நாடுகளுக்கும் ஒரு பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளன. தமிழர் மத்தியில உருவாகக்கூடிய, தமக்கு கண்மூடித்தனமாகத் துதிபாடாத அனைத்து சக்திகளையும் கொன்றொழிக்க வேண்டுமெனப் புலிகள் வெளிப்படையாகவே கூறித் திரிவது தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைப் போராட்டத்தையே நசுக்கிவிடக்கூடிய சாதகமான சூழ்நிலையை இந்தியாவிற்கு உருவாக்கிக்கொடுத்துள்ளது.

வீரியமாகவும், தனித்துவமாகவும் இயங்கக்கூடிய தமிழ்த்தேசிய உணர்வு தன் ஒருமைப்பாட்டிற்கு 1916ம் ஆண்டிலிருந்து (தென்னிந்திய நலஉரிமைச் சங்கம்-திராவிட இயக்கத்தின் முன்னோடி தொடங்கப்பட்ட வருடம்) பெரும் ஆபத்தாக இருந்துவருகிறது என்பதை மனதில் கொண்டே டெல்லி செயல்படுகிறது. இதன காரணமாகவே இந்தியா இன்று சிங்களப் பேரினவாதத்தோடு கைகோர்த்தேனும் தமிழ்த் தேசியத்தைக் காயடித்து விடலாம் என எண்ணுகிறது.

பிரேமதாசா இன்று தோன்றியுள்ள சர்வதேச சூழ்நிலையில் தனது ஆட்சியைப் பலப்படுத்து முகமாக ஜனநாயகப்படுத்தல் வேலைகளில் இறங்கி, பத்திரிகைச் சுதந்திரம், ஆட்கடத்தல பற்றிய விசாரணைக் கமிஷன் நியமனம், அரசியற் கொலைகள், கடத்தல்கள ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்ட பொலீஸ் இராணுவ விஷேட பிரிவுகளை கலைத்தமை ஆகிய காரியங்களைத் துரிதமாகச் செய்து அல்லது செய்வதுபோல் காட்டிச் செயல் படுவது கண்கூடு. இதேவேளை புலிகள் சர்வதேசச் சூழலை உணராமல் இயங்குவதும், தாம் கேட்கவிரும்பும் கருத்துக்களை மட்டுமே துதிபாடிகளின் மூலம கேட்பதும், தமிழர் தேசிய உரிமைப் போராட்டத்தை கூண்டோடு கைலாசம் அனுப்பக்கூடிய நிலைமையைத் தோற்றுவிக்கிறது என்பதைப் புலிகள் உணரவில்லை. எனவே இந்தியாவின் ஆசீர்வாதத்தோடு நிகழப்போகும் குடாநாட்டின் மையத்தை நோக்கிய இராணுவத் தாக்குதலையும் அங்கு பொதுமக்கள் அழிவையும் உலக சமூகம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப் பட்டிருக்கிறது. புலிகள் நசுக்கப்படவேண்டிய ஒரு பயங்கரவாத இயக்கம். அவர்கள் ஒரு இராணுவ இயக்கமல்ல என்றும் அவர்கள் இன்றும் ஏனைய இயக்கங்களை நசுக்கும் தனிநபர் கொலைகள், முஸ்லீம்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைகள ஆகியவற்றில் ஈடுபடுவதால் அவர்கள் ஒரு சமூக விரோதக் கும்பல் என்றும் ஆகவே தமிழர் பெருவாரியாக அழிந்தொழிந்தாலும் புலிகள் அழிக்கப்படவேண்டும் என டெல்லி சர்வதேச சமூகத்தினர் மத்தியில் பிரச்சாரம் செய்கிறது. புலிகள் சில ஜனநாயகப் பண்புகளையேனும் வெளிப்படுத்தும் வரை இந்தியாவின் இப்பிரச்சாரத்தை தம் நாடுகளால் எதிர்க்கவோ, குடாநாட்டில் நிகழக்கூடிய இனப்படுகொலையைத் தடுக்கும் வகையில் குரல் எழுப்பவோ முடியா திருப்பதாக கொழும்பில் உள்ள சில மேற்கு நாட்டு இராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர்.


இயக்கங்கள் அழிந்தபின் மீண்டும் தாமே அரசோச்சலாம் என கொழும்பில் தமது குளிரூட்டப்பட்ட காரியாலயங்களில் இருந்துகொண்டு கனாக்காணும் கூட்டணி வக்கீல்களும் அவர்களது கையாட்களும ஒன்றைக் கவனிக்கத் தவறுகின்றனர். இந்தியாவும் சிங்கள இராணுவமும், பௌத்த பீடங்களும், சிங்கள இனவாதக் குழுக்களும் இன்று தம்மிடையே ஏற்படுத்தியுள்ள கூட்டு யாழ்ப்பாணம் வீழ்ந்த பின்னர தமிழ்த்தேசியத்துக்கே குழிதோண்ட முற்படும் என்பதே அது.

பெரியாரும், அண்ணாவும், தந்தை செல்வாவும், இயக்கங்களின ஆரம்பகால இலட்சியங்களும் கட்டிவளர்த்த பகுத்தறிவு வாதத்தையும், தமிழ்த் தேசிய பண்பாட்டையும், உரிமைப்போரையும இந்திய உபகண்டத்தின் தென்கோடியிலிருந்து அழித்தொழிக்க இந்தியா செய்யும் சதிகளை யாழ்குடாநாட்டில் நிகழப்போகும பாரிய உயிரழிவின் பின்னராவது தமிழர் உணர்ந்து கொள்வார்களா?

நன்றி சரிநிகர்

www.tamilarangam.net

# முடிவு எப்போது?



(புலிகளின் பாசிச நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி ஈழப் போராளிகள் வெளியிட்டுள்ள பிரசுரம்).

டிசம்பர் மாதத்தின் இறுதி வாரம்.

வழமை போல தனது புத்தகக்கடையில் வீட்டுக்குத் தேவையான மரக்கறிச் சாமான்களை வாங்கிவந்து வைத்துவிட்டு வியாபாரத்திற்காக உட்கார்ந்திருந்தார் அவர். சில நிமிடங்களில் ஆயுதமேந்திய சில புலி வீரர்கள் சைக்கிளில் வந்து குதித்தனர். யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலிருந்த அந்தப் பழைய கடைத் தொகுதியிலிருந்த இந்தப் பிரபலமான - ஆனால் முக்கி முனகி இயங்கிக் கொண்டிருந்த - புத்தகக் கடைக்குள் அவர்கள் நுழைந்தனர்.

புத்தகங்களை விற்பது ஒரு பணம் தரும் வியாபாரமாக இருந்த முன்னைநாள் யாழ்ப்பாணம் அல்ல இது இன்று. புத்தகங்களைப் படிக்க நேரமில்லாமல் தமது அன்றாட ஜீவனோபாயத்திற்காக அழவேண்டியது ஒருபுறம். இந்தக் குறிப்பிட்ட கடையின் புத்தகங்களைப் படிப்பது தேசத் துரோகமாகக் கருதப்படுமோ என்ற அச்சம் மறுபுறமுமாக புத்தகங்கள் விலைபோகாத ஒரு புத்தகக்கடையாக அது மாறி விட்டது.

அந்தப் புத்தகக் கடைதான் "யாழ் புக் கவுஸ்".

நுழைந்தவர்கள் புத்தகங்கள் படிப்பதற்கே என்பதை அறியாதவர்கள் என்பதல்ல விடயம் வேறு என்பது வியாபாரத்திற்காக உட்கார்ந்திருந்த அவருக்குத் தெரிந்திருந்தது.

சீன உளவாளி என்றும் இன்னோரன்ன வேறு அடைமொழிகளாலும் அழைக்கப்பட்ட முன்னைநாள் கொம்யூனிஸ்ட் கட்சியின், உறுதி குலையாத ஒரு கொம்யூனிஸ்ட் அவர். தேசத்தினதும், மக்களினதும் விடுதலையில் ஆர்வமும், அக்கறையும் கொண்டிருந்தபோதும் நடைமுறையிலுள்ள 'அரசியற் பாதையில் நம்பிக்கை அற்றிருந்த' காரணத்தால் 'துரோகிகளில் ஒருவராக இருக்கக் கூடுமோ' என வழமைபோல அநியாயமாகச் சந்தேகிக்கப்பட்டவர் அவர்.

அவர் வேறு யாருமல்ல.

அறுபதுகளில் தீவிர கொம்யூனிஸ்ட்டும், போராளி பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும், எழுபதுகளிலும், எண்பதுகளிலும் பலராலும் மதிக்கப்பட்ட அறிவாளிகளில் ஒருவருமான மணியண்ணை தான் அவர்.

மாற்றுக் கருத்தாளரையும் மதிக்கத் தெரிந்த பண்பாளரான அவர் ஒரு குழந்தைக்குத் தந்தை. ஒன்றரை வயதான பெண் குழந்தைக்குத் தகப்பனான அவர் தனது குடும்பத்தின் நிலை பற்றி எடுத்துக் கூறியது எப்போதும் போலவே புலிகளுக்குக் கேட்கவில்லை.

அறுபதுகளில் அரசியற் காரணங்களுக்காக பல்கலைக்கழகப் படிப்பை உதறிவிட்டு முழுநேர கொம்யூனிஸ்ட்டுக் கட்சி (மா-லெ) உறுப்பினராகிய மணியண்ணை தொழிலாள விவசாயிகளின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணிக்க எந்நேரமும் தயாராக இருந்த ஒரு தேசபக்தன்.

"விசாரணை"க்காக புலிகளால் அழைத்துச் செல்லப்பட்ட மணியண்ணை எதிர்பார்த்தது போலவே இன்று வரை விடுவிக்கப்படவில்லை. இலங்கையின் இனவெறி அரசு, இந்திய மேலாதிக்கம் என்பவற்றை உறுதியாக எதிர்த்த அவர் மக்களின் சனநாயகம், விடுதலை என்பவற்றின் அவசியம் தேசவிடுதலைக்கு ஒரு தவிர்க்க முடியாத முன்நிபந்தனை என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தவர் என்பது மட்டுமே அவரது "துரோகம்"

அண்மைக்கால கைதுகளான கேசவன் முதல் செல்வி, தில்லைநாதன் வரையான கைதுகளில் இவர் பதின்மூன்றாவது நபர்.

கடத்தப்பட்டதிற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. அப்படித் தெரிவிப்பது அவசியம் என்ற அம்சம் புலிகளின் அகராதியில் ஒருபோதும் இல்லை.

மனிதர்களது சிந்தனைகளை நசுக்கி தாம் நினைப்பதைப் பேசுவதே தேசபக்தி என்று சாதிக்கும் "விடுதலை"ப் புலிகளது போராட்டம் தேடித் தந்திருப்பது அராஜகத்திற்கும், அடக்குமுறைக்கும், மனிதப் படுகொலைகளுக்குமான சுதந்திரத்தையே.

தேசத்தின் வாயை மூடிவிட நினைக்கும் புலிகளுக்கு ஒரு வார்த்தை: இதை மூடுவதற்கு உள்ள ஒரே வழி முழுத் தேசத்தின் மக்களையுமே கொன்று விடுவதுதான்! அதைச் செய்யுங்கள். பின்னர் மனிதர்கள் இல்லாத தேசத்தில் புலிகள் மட்டுமே உறுமும் விடுதலை வாங்கித் தந்த பெருமை உங்களுக்குச் சேரும்.

உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களே...

கேசவன்... செல்வி... தில்லை... வரிசையில் இன்று பதிதாக மணியண்ணை. இன்னும் எத்தனை பேரோ? இந்த மனிதப் படுகொலைகளுக்கு முடிவுகட்டுவது எல்லோரும் அழிந்த பின்பா?

— நண்பர்கள் (ஈழம்)

---

ளாதவர்கள் என்றகருத்தே பரப்பப்படுகிறது. ஆனால் அது அப்பட்டமான பொய். நாங்கள் சட்டப்படி நடக்கும் குடிமக்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் ஒவ்வொருவரும் தனித்தனியே போலீசு நிலையங்களில் பதிவு செய்து கொண்டுள்ளோம்.

இம்முகாமில் சிறைவைக்கப்பட்ட எங்களின் உண்மை நிலை குறித்து பத்திரிக்கைகள் எழுதுமானால் மிகவும் நன்றியுடையவர்களாக இருப்போம். இதனால் பதிவு செய்து கொண்டவர்கள் நாம் என்பதைப் பொதுமக்களுக்கும் மேலதிகாரிகளுக்கும் தயவு செய்து தெளிவுபடுத்துங்கள்.

[illegible] பட்ட போலீசு நிலையத்தில் சோதித்தறிந்து கொள்ளலாம். மேலும் விவரம் அறிய விரும்பினால் பேட்டி காண இந்த முகாமுக்கு வரலாம். நாங்கள் நேர்மையானவர்கள். உண்மையான அப்பாவிகள். நீங்கள் பேட்டி காண வந்தால் நாங்கள் அப்பாவிகள் தாம் என்பதை உணர்வீர்கள். தயவு செய்து பேட்டி காண வாருங்கள். நன்றி!

தங்கள் உண்மையுள்ள
தமிழ் அகதிகள்,
சிறப்புமுகாம், மதுராந்தகம்.

ராஜீவ் கொலைக்காக ஈழத் தமிழ் அகதிகள் அனைவரையும் பழிவாங்கும் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் வெறி இவர்கள் விவகாரத்தில் அப்பட்டமாகவே தெரிகிறது. இந்த கடிதத்துடன் 32 பேர்கள் அடங்கிய ஒரு விவரப் பட்டியலும் இணைக்கப் பட்டிருந்தது. அவர்கள் எந்த சமயத்தில், எந்த விதத்தில், இங்கு வந்து சேர்ந்தார்கள்; எப்போது, எந்தப் போலீசு நிலையங்களில் பதிவு செய்து கொண்டார்கள்; சென்னை விமான நிலையத்தில் வைத்து எப்படிக் கைது செய்யப்பட்டார்கள் என்கிற விவரங்கள் அப்பட்டியலில் உள்ளது.

இப்படி எவ்விதக் குற்றமும் செய்திடாதவர்களையும் இந்த அரசு விதித்துள்ள எல்லா சட்ட விதிகள் கட்டுப்பாடுகளுக்கும் பணிந்து நடப்பவர்களையும் முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஏராளம். எண்ணிக்கை தெரியாது. எவ்வளவு அடக்குமுறைகள் பாய்ந்தாலும் இந்த ஈழத் தமிழர்களுக்காக அவர்களின் விடுதலை உரிமைக்காக துணை கொடுக்க வேண்டியது ஜனநாயக சக்திகளனைவரது கடமையாகும். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாசிச ஜெயலலிதா அரசின் கொடுமை
# காரணமின்றி ஈழத் தமிழருக்குச் சிறை

மதுராந்தகத்தில் ஈழத் தமிழ் அகதிகள் சிறப்பு முகாம் என்கிற பெயரில் "ஒரு தனிச் சிறை" உள்ளது. எவ்விதக் காரணமும் இல்லாமல் அப்பாவி ஈழத்தமிழர்கள் பலர் இந்தச் சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர். அவர்கள் தங்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதியை வெளி உலகுக்கு அறிவிக்கக் கோரி "புதிய ஜனநாயகம்" பத்திரிக்கைக்கு எழுதியுள்ள கடிதத்தை இங்கே பிரசுரிக்கிறோம்.

அன்புள்ள ஐயா,

பொருள்: பதிவு செய்து கொண்டுள்ள அப்பாவி ஈழத்தமிழர்களுக்கு இந்த முகாமில் உள்ள ஈழ அகதிகளாகிய நாங்கள் கடந்த ஏழு மாதங்களுக்கு மேலாக பல இன்னல்களை அனுபவித்துவருகிறோம்.

இலங்கையில், இன வன்முறையினால் நாங்கள் தாளமுடியாத பிரச்சினைகளை அனுபவித்தோம். எங்கள் உயிரைக் காத்துக்கொள்வதற்காக நாங்கள் படகிலும், விமானத்திலும் இந்தியா வந்தோம். அங்கே இன வன்முறைக்கு எங்கள் உற்றார் உறவினரை இழந்தோம். இங்காவது அமைதியாக வாழலாம் என்று அகதிகளாக வந்தோம். முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வரையிலும் அந்த நம்பிகை இருந்தது. அந்நிகழ்ச்சிக்குப் பிறகு ஈழத் தமிழர்களுக்குக் கெட்ட காலம் துவங்கியது. ஈழத் தமிழ் அகதிகள் தமது குடியிருப்புகளுக்கு அருகிலுள்ள போலீசு நிலையங்களில் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று தமிழக அரசு அறிவித்தது: நாங்கள் அவ்வாறே பொறுப்புடன் பதிவுசெய்துகொண்டோம்.

பதிவு செய்து கொள்ளப் போலீசு நிலையத்திற்குப் போனபோதுதான் எங்களில் பலருக்கு மிகவும் கொடுமை இழைக்கப்பட்டது 1991 ஜூலை 16-ந் தேதி போனவர்களை அடுத்தடுத்த நாள் வரும்படி இழுத்தடித்தார்கள். கடைசியாக 19-ந் தேதி பதிவு செய்யப் பட்டது. அதன் பிறகு, எங்களைப் பற்றி விசாரணை நடத்தி ஒரு வாரத்துக்குள் விடுவதாக உறுதி கூறி மதுராங்கத்துக்கு அனுப்பினர். வாரம் மாதங்களாகின ஏழு மாதங்களாகியும் எவ்வித விசாரணையும் இல்லாமல் போனது. போலீசின் வாக்குறுதியால் நாங்கள் ஏமாற்றப்பட்டோம். இந்த முகாமுக்குக் கொண்டுவரப்பட்ட இன்னொரு வகையினரும் இங்குள்ளனர். இவர்கள் மீனம்பாக்கம் விமானநிலையத்தில் இருந்து கொண்டுவரப் பட்டார்கள்: பதிவு செய்யவில்லை என்ற காரணத்திற்காகவும் அல்ல. இவர்கள் ஒரு ஏஜெண்டின் உதவியுடன் மேலைநாடுகளுக்குப் போவதற்காக மீனம்பாக்கம் விமான நிலையம் போனவர்கள். இவர்களது பயண-கடவுச் சீட்டுகளில் ஏதோ சில குறைபாடுகள் இருப்பதாகக் கூறி விமானநிலைய அதிகாரிகளால் போலீசிடம் ஒப்படைக்கப் பட்டவர்கள்.

போலீசார் எங்களை நீதி விசாரணைக்காக வழக்கு மன்றங்களுக்கு அனுப்பாது இந்த முகாமுக்கு அனுப்பியதால் துரதிருஷ்டம் நேர்ந்தது. இம்முகாமில் உள்ள பெரும்பான்மையினரான நாங்கள் விமானநிலையத்தில் இருந்து கொண்டுவரப்பட்டு இம்முகாமில் சிறை வைக்கப்பட்டுள்ளோம்: ஆயுதமேந்திய போலீசார் எப்போதும் காவலிருக்கின்றனர்.

இன்னமும் நாங்கள் பதிவுசெய்துகொள்

*ஜெர்மனியில்...*

## தொடரும் நாஜிகளின் தாக்குதல்

31.01.1992 வெள்ளிக்கிழமை காலை 4.30 மணியளவில் ஹெசன் (Hessen) மாநிலத்திலுள்ள லம்பர்ந்தைம் (Lampertheim) என்ற நகரத்தில் அகதிகள வாழும் கட்டிடம் ஒன்று நாஸிகளினால் தீவைத்துக் கொளுத்தப்பட்ட போது இலங்கை அகதிக் குடும்பத்தைச் சேர்ந்த நிலீமா (25 வயது. 4 மாதக் கர்ப்பிணிப் பெண்) மொகைதீன் (30 வயது). மூடக் (13 மாதக் குழந்தை) (தெகிவளையைச் சேர்ந்தவர்கள்) ஆகியோர் தீக்கிரையாயினர்.

இக்கட்டிடத்தில் லெபனான், துருக்கி, சிரியா, நைஜீரியா, இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த இருபது அகதிகள் வசித்தனர்.

பலகையிலான படிகளில் வைக்கப்பட்ட தீ இருபது நிமிடங்களுக்குள் மேற்பகுதிகள் முழுவதற்கும் பரவியது. வெளியேறும் படிகளில் முற்றாக தீப்பிடித்திருந்தமையாலும், பால்க்கனி இல்லாமையினாலும் நிலீமா குடும்பத்தினர் தப்பித்துக் கொள்ள முடியவில்லை. இக்கட்டிடத்தில் வசித்த மிகுதிப் பதினேழு பேரும் பால்க்கனி, கூரை ஆகிய வழிகளாலும் மரங்களில் தாவியும் உயிர் தப்பிக் கொண்டனர். இச்சம்பவத்தில் காயமுற்ற நைஜீரியர் ஒருவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

உயிர் தப்பியவர்களின் தகவலின்படி நிலீமா குடும்பத்தினர் உதவிகேட்டுக் கதறியதாகவும், தங்களால அவர்களைக் காப்பாற்ற முடியாமல் வெளியே தப்பிவந்து பொலிஸாரிடம் அவர்களைக் காப்பாற்றும்படி கதறிக் கேட்டதாகவும் அதற்கு தீ எரிந்து கொண்டிருக்கிறது: ஒன்றும் செய்ய முடியாது என்று பொலிஸார் அவர்களைக் காப்பாற்ற எந்த முயற்சியும் எடுக்கவேயில்லை என்றனர்.

இம்மூவரின் உடல்கள் அடையாளங் கண்டுகொள்ளச் சிரமமான வகையில் கருகிய நிலையில் மதியம் 12 மணியளவில் கண்டெடுக்கப்பட்டது.

பொலிஸாரின் தகவல்களின் படியும், பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் இத்தீப்பிடித்ததற்கான காரணம் என்னவென்று சரியாகத் தெரியாது என வழமைபோலவே உண்மையை மூடி மறைக்கின்றன.

இப்படிகளில் தீப்பிடிக்க வேறு எந்தக் காரணங்களும் இருக்க முடியாது. ஏற்கனவே இங்கிருந்த குப்பைத் தொட்டிகள் சென்ற ஆண்டு செப்டெம்பர் மாதம் நாஸிகளால் கொளுத்தப்பட்டன. அண்மையில் ஜெர்மனியில் பரவலாக நடைபெற்ற அகதிகளுக்கெதிரான நாஸிகளின் தாக்குதல் முறைகளும் இங்கே கையாளப்பட்டுள்ள முறையும் ஒரேமாதிரியாக இருப்பதனால் இச்சம்பவம் நாஸிகளினாலேயே செய்யப்பட்டது என்று திட்டவட்டமாகக் கருதப்படுகிறது.

"ஹொயஸ்வேடா" சமட்டவந்திரு

பின்பு ஒவ்வொரு இரவும் வெளிவாசற் கதவைப்பூட்டி பாதுகாப்பை உறுதி செய்து கொண்டு படுக்கைக்குச் செல்வது மொகைதீனின் வழக்கம். நாஸித் தாக்குதல்கள அடங்கியிருப்பதுபோல் தென்பட்டதால் இவ்வழமையை மொகைதீன் அக்கறையின்றி விட்டு விட்டார்.

தப்பியவர்களின் ஒருவரான நைஜீரியப் பெண்மணி ஒருவரின் தகவல்:

"அதிகாலை நாலரை மணி. நானும் எனது சகோதரனும் தூங்கிக் கொண்டிருந்தோம். திடீரென புகைவருவதாய் உணர்ந்தேன். படியால் ஓடித் தப்பலாம் என ஓடினேன். படி முழுவதும் தீ. கீழ்மாடியில் நிலீமா, மொகைதீன் கதறல் சத்தம் கேட்டது. அவர்கள் உதவி உதவி எனக் கத்தினர். அவர்கள் வீட்டிற்குப் பால்க்கனி இல்லை. படிகளினால் ஏறிவந்தால் எங்கள் வீட்டுக் கூரையினால் தப்பி ஓடலாம். ஆனால் படிகளிலும் தீ. அவர்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. நான் திரும்பி ஓடிவந்து ஓட்டைப் பிய்த்து வெளியேறினேன். அவர்களின் உதவி உதவி என்ற கதறல் சத்தம் இன்னமும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவர்களின் சாவும் இச்சம்பவமும் கொடூரமானது. ஆனால் இதிலும் கொடுமையான விசயம் என்னவென்றால், நிலீமா குடும்பத்தினர் உள்ளே உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கையில் பொலிஸாரிடம் நானும் இன்னும் பலரும் கதறிக் கேட்டும் அவர்களைக் காப்பாற்ற சரியான முயற்சிகள் எடுக்கப்படவில்லை. பொலிஸார் முயற்சி எடுத்திருந்தால் அவர்களைக் காப்பாற்றியிருக்கலாம்"

-இலங்கை பாசிச எதிர்ப்புக்குழு

□ புதிய ஜனநாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "இங்கே இருந்தால் சித்திரவதை! அங்கே போனால் படுகொலை!"

## -ஈழ அகதிகளின் கண்ணீர் பேட்டி

ஜெயா-வாழப்பாடி கும்பல் விரும்பியபடியே வாரம் ஒரு கப்பல் விதம் ஈழத் தமிழ் அகதிகள் நாடு திருப்பி அனுப்பப்படுகின்றனர். ராஜீவ் கொலைக்குப் பழிவாங்கும் வகையில் ஈழத் தமிழ் அகதிகளை சிங்கள இனவெறியர்களிடம் பலிகடாக்களாக விரட்டுவது என்பது தான் அவர்களது ஆரம்ப நோக்கமாக இருந்தது. அகதிகளிடையே புலிகள் ஊடுருவியிருக்கிறார்கள். அகதிகளால் இங்கே சட்டம்-ஒழுங்கு கெடுவதோடு பயங்கரவாத ஆபத்து ஏற்படும். அகதிகளைப் பராமரிக்க முடியவில்லை என்று பல காரணங்கள் சொன்னார்கள். இப்போது இலங்கையில் இயல்புநிலை திரும்பிவிட்டது. ஈழ அகதிகள் தாம் விரும்பியே நாடு திரும்புகிறார்கள் என்க சொல்கிறார்கள்.

இப்போது மீண்டும் இலங்கை அரசியலில் தீவிரமாகத் தலையிட்டு ஆதிக்கம் செலுத்தும் நோக்கத்துக்காக ஈழத்தமிழ் அகதிகளைப் பலியிடுவதென இந்திய அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. இந்த நோக்கத்தோடுதான் ஈழத்தின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அகதிகளை அனுப்புவதில் குறியாக இருக்கிறது. ஏனெனில் புலிகளுக்கு வடக்கிலும் ஈழத் துரோகிகள் கிழக்கிலும் முன்பு வலுவாக இருந்தனர் என்பது தெரிந்ததே. அதோடு இதுவரை அனுப்பப்பட்ட அகதிகளில் பெரும்பான்மையினர் கிழக்கு மாகாணத்தில் முன்பு அரசு அதிகாரிகள் ஊழியர்களாகவும், ஈழத் துரோக அமைப்பாளர்களாகவும் இருந்தவர்களும் அவர்களது குடும்பங்களும் ஆகும். இவர்கள் தாம் சுய விருப்பத்துடன் இலங்கை திரும்புவதாகவும், இந்திய அரசு இதுவரை செய்துவந்த உதவிகளுக்கு நன்றி பாராட்டுவதாகவும் கூறியுள்ளனர்.

உண்மையில் ஈழத் தமிழ் அகதிகளில் பெரும்பான்மையினரது கருத்து இதற்கு மாறானது. அவர்கள் எத்தகைய நிலைமைகளில் இங்கு அகதிகளாக வரநேர்ந்தது; இங்கும் எப்படி நடத்தப்பட்டனர்; இங்கிருந்து வெளியேறும்படி எப்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என்பதை சமீபத்தில் சில முகாம்களுக்குச் சென்று நமது பெண் தோழர்கள் இருவர் எடுத்த பேட்டிகள் தெளிவுபடுத்துகின்றன. அப்பேட்டிகளை இங்கே வெளியிடுகிறோம்.

இலங்கையில் திரிகோணமலையில் பக்கத்தில் ஒரு கிராமம்; இது அங்கு நடந்த கண்ணீர்க் கதை.

அங்கு இந்திய ராணுவத்திற்கும் எல்.டி.டி.ஈ.க்கும் மெயின் ரோட்டில் மோதல் நடந்தது. என்ர மகள் பிரசவத்திற்கு துடிச்சுக் கொண்டு இருக்கிறா. தனியா ஆம்பிளை வெளியவும் போக முடியாத சூழ்நிலை. மருமகனையும் என்ர மகளையும் அனுப்பி வைச்சனான். பிள்ளைகள் ஆஸ்பத்திரி போற வழியிலதான் சண்டை நடக்கிறது. மருமகன் சரி காட்டு வழியாகப் போகலாம் என்று பிள்ளையை கூட்டிக்கொண்டு போயிருக்குது. பிள்ளைக்கு வழியிலேயே வலி கூடிப்போச்சுது. அந்தக் காட்டுக்குள்ளேயே பிள்ளையும் பிறந்திட்டுது. பெடியன் வந்து எங்களிட்ட சொல்லலாம் என்று நினைத்தாலும் வந்து சொல்ல முடியாத நிலை. கடைசியா தாயும் பிள்ளையும் மருத்துவ வசதி இல்லாததால் செத்துப் போயிற்றுதுகள். மருமகன் கத்திக் குளறிக் கொண்டு பிணத்தையும் தூக்கிக் கொண்டு வருது. அவகுட சத்தத்தையும் குண்டு சத்தத்தையும் மீறி ஒப்பாரி அழுகைக் குரல் மேலோங்கி கேக்கிறது. இறந்துபோன தாய்க்கு ஏற்கனவே ஒரு பெண் குழந்தை 6 வயதில் உள்ளது. என்னடா எல்லோரும் கத்திக் கொண்டு இருக்கிறார்களே என்று வந்து பார்த்ததும் அதுவும் சேர்ந்து அழுகிறது. இதைக் கண்ட தந்தை என் நெஞ்சே வெடிச்சிடும் போல உள்ளது என்று அப்பிள்ளையை தூக்கி மேலும் அழுகிறார். பலம்பகி [illegible] கிறுங்க. இந்தியாவுக்கு போகலாம் என்று கிளம்பி விட்டோம். எங்கள் எல்லோரையும் அனுப்பி போட்டுத் எத்திவிட்டு மருமகனே போட்டையும் ஒட்டிக்கொண்டு வந்து நாகப்பட்டினம் கரையில் விட்டுவிட்டு அந்த பிள்ளையை எங்களிடமே விட்டுவிட்டு. கவனமாய் பார்த்துக் கொள்ளுங்கள் மாமி என்று சொல்லிவிட்டு பிள்ளையை தூக்கி கொஞ்சி விட்டு போன பெடியன் தான்; இன்னும் அவன் எங்கு இருக்கிறானோ தெரியவில்லை. செத்திட்டானோ உயிரோட இருக்கிறானோ தெரியவில்லை.

இப்ப வளந்து பிள்ளைக்கு 9 வயது. எங்களிடம் கேக்குது. ஏன் என்ர அம்மாவும் அப்பாவும் என்னோட இல்ல. அவங்கள வரச்சொல்லி கடிதம் போடுங்க அம்மம்மா என்று ஒவ்வொரு நாளும் என்னை பிச்சுப் படுங்குது. நான் அழத்தான் முடியும். வேற என்ன சொல்லமுடியும். ஒருநாள். கேம்பில் கோயில் ஒண்டு இருக்குது. அங்க போய் சாமிகிட்ட மன்றாடியிருக்குது. ஏன் என்னை எங்கட அம்மாட்ட சேர்த்து வைக்க மாட்டேன்குற: நான் என்ர அம்மாவையும் அப்பாவையும் தங்கச்சியையும் பாக்கனும். நீ எனக்கு காட்டாட்டி நான் இதே இடத்தில் வந்து செத்துப் போயிருவேன் என்டு அழுதுள்ளது. இதைப் பார்த்தவர்கள் போய் சொல்லியிருக்கிறார்கள். கோயிலுக்கிட்டே உங்க பேத்தி அழுதுகொண்டு இருக்குது என்டு. நான் போறேன். அங்க கண்ணை துடைச்சிட்டு நான் அழேல்லனை. நானேன் கத்தோனும். நீ இருக்க: சும்மா வானே என்று எனக்கு சமாதானம் சொல்லி கூட்டிக் கொண்டு வந்துவிட்டது. நான் வீட்டில வந்து சொன்னன். அடியே உன்ர அம்மா (பெரியம்மாவைக் காட்டி) இவ தானடி. நீ ஏன் வேற என்னமோ நினைச்சுக் கொண்டு [illegible] மாவ எனக்கு தெரியும். அப்ப ஏன் இவ எல்லாம் கறுப்பா இருக்கினம். நான் வெள்ளையா என்ர அம்மா மாதிரி இருக்கிறன். நீ பொய் சொல்லுற என்டு மீண்டும் அழுதுள்ளது.

இந்த பச்சப் பிள்ளைக்கு இந்திய அரசாங்கம் பதில் சொல்லி ஆகனும். சரி ஆம்பிளப் பிள்ளைகளை அங்க வைச்சிருந்தா இலங்கை ராணுவம் வந்து கூப்பிடும். இல்ல பெடியங்களை எல்.டி.டி.இ.ஆர் வந்து கூட்டிக் கொண்டு போயிடுவாங்க என்று பயந்து பிள்ளைகளை இந்தியாவுக்கு கொண்டு வந்தோம். இங்க என்னடா என்டா. மண்ணாப் போவான் ராஜீவ் செத்ததால் பிள்ளைகளையெல்லாம் தேடிப்பிடிச்சு சிறையில் அடைக்கிறார்கள். சரி. கலியாணம் முடிச்சு வைச்சாலும் பிள்ளை பிழைச்சிடுவான் என்டு கல்யாணம் செய்து வைச்சேன். ஆரோ ஈ.பி.ஆர்.எல்.எஃப். பெடியன்கள் போலீசில சொல்லியிருக்கிறான். என்ர பிள்ளை எல்.டி.டி.ஈ.க்கு சப்போட் என்டு. மறுநாளே போலீஸ் வந்து நிக்குது. எங்க உன் மகன். உடனே எங்களோட அனுப்பிவை. இல்லை என்ன நடக்குமோ தெரியாது என்டு மிரட்டினான்.

என் பிள்ளையைத் தேடுறீங்க. அவன் நல்லபிள்ளை. வம்ப எதுக்கும் போக மாட்டான். நல்ல பிள்ளை என்று சொல்ல. ஆ... தெரியும் தெரியும் என்று சொல்லிவிட்டு. உடனே வந்ததும் அவனை வரச் சொல் என்டு போய் விட்டான். மறுநாள் வேன் நிறைய போலீஸ் வீட்டை வட்டம் போட்டு விட்டது. கியூ பிராஞ்ச், ஸ்பெஷல் பிராஞ்ச் எல்லோம் ஆள் மாறிஆள் கேள்வி கேட்டுக் கொண்டே இருக்கிறாங்கள். பிறகு போய் விட்டவர். என்ர மகன் பிறகு வீட்டுக்கு வந்தான். நாங்கள் நடந்ததை சொல்லவும் சரி. நான போலீஸ் ஸ்டேசன் போயிட்டு வாறன் [illegible] நாளும் இவனர அப்பாவும் பொண்டாட்டி எல்லோருமே ஸ்டேசன் போனோம். ஆ... ஆ... [illegible] ...என்று எகத்தா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளமாக கேலியாக பேசியவர்களை நீ ஏதோ நலைவளைத்தியா. கூடையா இருப்பாய் என்று நினைத்தேன் பாவம் நீ என்றான் என்னங் கைய விசயம் என்று கேட்க வாகப்பில வைத்துவிட்டது. என்னையும் இவரையும் அடிக்க கிழட்டு நாய்களா எண்டு இன்னும் கேவலமா பேசி சிரித்து கொட்டமடித்தது இந்தப் போலீஸ் 'கிப்பூ' பிராஞ்ச்கூட இந்த மாதிரிதான்.

☆ ☆ ☆

இப்ப கூட அந்த அம்மா எங்களிடம் பேசும்போது அந்த வயதானவர் வாட்ட சாட்டமான ஆள் யாரையும் பார்த்தால் மீசையையும் பார்த்து விட்டு சாதாரண ஆளைக்கூட போலீஸ் வருது வாயை மூடு என்று அம்மா வாயை அடைக்கிறார். அவ்வளவு பயம் வெறுப்பு. அதைப் பார்க்கும் போது எவ்வளவு வயித்தெரிச்சலாக உள்ளது. அந்தப் பையனை என்.எஸ்.ஏ. (N.S.A.) சட்டம் போட்டு திருச்சி ஜெயிலில் இருக்கிறார்.


இப்பிரச்சினைகளை பார்த்து பயந்து அங்கதான் ராணுவத்திட்டேயும் எல்.டி.டி.ஈ.. ஈ.பி.ஆர்.எல்.எஃப். டெலோ. இவர்களிடம் ஆண்பிள்ளைகளை பறிகொடுத்து விடுவோம் எண்டு இங்க வந்தா புதிய புதிய சட்டமெல்லாம் போட்டு ஜெயிலில் அடைக்கிறார்கள். சித்திரவதை செய்கிறார்கள். அதனால் இலங்கைக்கே போனாலும் பரவாயில்லை. எங்கட பிள்ளைகள் போராடியே சாகட்டும் என்று ஒருசிலர் இலங்கை செல்ல காரணமாயுள்ளது.

ஆண்பிள்ளைகளுக்கு பாதுகாப்பில்லை. அதனால் போகிறோம் என்று சொல்கிறார்கள்.

### இலங்கை அகதிகளின் அவலநிலை புதுக்கோட்டை மாவட்டம்

நாங்கள் இலங்கையில இருந்து வந்து இப்ப எங்கள புதுக்கோட்டை மாவட்டத்துக்கு பக்கத்து கிராமம் வேளா விளக்கு என்ற இடத்தில வச்சிருக்கிறாங்க. அந்த கேம்பில ஒரு வசதியும் இல்லை. 'ஆஸ்பெஸ்டாஸ்' கூரை போட்டு சின்ன ரூமாக அடைச்சுக் கொடுத்திருக்கினம். வெயில் வந்தா வெளியிலயும் இருக்க முடியாது. உள்ளயும் இருக்க முடியாது. கக்கூசு பத்தாது. கக்கூசு கட்டிக் கொடுத்திருக்கிறாங்க. ஆனா தண்ணீர் 'பைப்' இல்லை. இதனால் கக்கூசு சுத்தம் இருக்காது. பிள்ளைகளுக்கு ஏதாவது ஒரு வருத்தம் (நோய்) வந்து கொண்டே இருக்கும். எங்கட ஊரைவிட்டு இங்க வந்ததில பிள்ளைகளை அங்க 'ஆமி' யிட்டயும் (ராணுவம்) இங்க வருத்தத்திடமும் சாவு குடுத்துட்டோம். இப்படி சுத்தமில்லாம இருக்கிறதனால கிழமைக்கு ஒரு வருத்தம் வந்து கொண்டே இருக்கு. அம்மை நோய். கட்டி கட்டுது. வயிற்றாலடி. சத்தி (வயிற்றுப் போக்கு. வாந்தி) இப்பிடி வரும்.

அரிசி போடுறாங்கள். இந்த ஊர் பண்டி (பன்றி) கூட தின்னாம முகத்தை சுளிக்கும் வேற வழியில்லாம திண்டு தொலைப்போம் எப்பயாவது வெள்ளையா அரிசி போட்டா 'இண்டைக்குத்தான் பொன்னி அரிசி போட்டிருக்கினம்' என்று நாங்கள் சந்தோசப்படுவோம்.



வெளியேற்றப்படும் ஈழ அகதிகள்: இந்திய மேலாதிக்கத்துக்கு பலியாடுகளா?

இப்ப மண்ணெண்ணை ஒரு மாசத்துக்கு 2 லிட்டர் தான். விளக்கு எரிக்கக்கூட பத்துதில்லை. திடீரென்று இலங்கைக்கு போகச் சொல்லி கையெழுத்து கேட்கிறார்கள். நாங்கள் கொடுக்கவில்லை. அங்க எங்கட வீடு. வாசலெல்லாம் அழிஞ்சு போச்சு. சிறுதொழில் செய்துதான் குடும்பம் நடத்தனும். அங்க போனா இப்போதைக்கு எங்களால பொழைக்கவே முடியாது. அங்க சாமான்கள் விலை எல்லாம் பயங்கரம். நாங்க இங்க வரும்போது எங்கட உசிரை கையில புடிச்சுக் கொண்டு வந்தோம். ஆனா இப்ப போ என்றால் நாங்கள் எங்க போறது. கையெழுத்து நாங்க போடமாட்டோம்

> **கடிதத்தின் மூலம் அறியப்பட்ட இலங்கை நிலைமைகள்**
>
> அரிசி 1 கிலோ - 50 ரூபாய்;
> சீனி 1 கிலோ - 100 ரூபாய்;
> ம.எண்ணை 1 லிட்டர் - 250 ரூ;
> 1 சோப் - 50 ரூபாய்.
>
> உறபத்திக்கான அடித்தளமே நொறுக்கப்பட்ட பிறகு அத்தியாவசிய பொருட்கள் வருவதற்கான தடயமே இல்லை. தேங்காய் எண்ணெயில்தான் விளக்கு எரிக்கின்றனர். மின்சாரமே இல்லை.
>
> சோப் இல்லாததால் தலைக்கு பனம்பழத்தின் களியை எடுத்து தலைக்கு தேய்த்து குளிக்கிறார்கள். குளித்து விட்டு வரும் போது பனங்களி வாசனைக்கு மாடு விட்டு விரட்டுமாம். அங்கால ஓடினா ஆமிக்காரன் துரத்துறான். இங்கால ஓடினா மாடு. எதற்கு தப்புவதென்றே தெரியவில்லை யென்று கண்ணீரோடு எழுதுகின்றனர்.
>
> இன்னும் சாம்பல். களையான புற்று மண் இவையே அவர்களின் சோப்பாகவும் பயன்படுகிறது.
>
> குறிப்பு: இவ்விலை உயர்விலும் இலங்கை மக்கள் ஒரு வழிகாட்டியாக செயல்படும் கூட்டுறவு சங்கங்கள் போன்ற சில. குறைந்த விலையில் சாமான்கள் கொடுக்கிறது.

என்று சொன்னா சொல்லுறான்கள். இப்ப போடுங்க: மேல முடிவு சொன்ன பிறகுதான் அனுப்பவேன் என்றார்கள். சரியென்று எழுதிக் கொடுத்தோம் இப்ப வந்து ஏறுங்கிறான்.

இந்தப் பிரச்சினை இப்ப வர காரணமே மண்ணாப் போவான். பாடையில போவான். அழிஞ்சு போவான் ராஜீவ் காந்திப் பயலால வந்த வந்த கேடு.

அவன் செத்த பிறகுதான் இப்ப சரியான கரச்சல். வெளியில வேலைக்கு போக விடுறான்கள் இல்லை. குடுக்கிற காசு பத்துதுமில்லை. 15 நாளைக்கு ஒருமுறை பெரியவர்களுக்கு 55, சிறுவர்களுக்கு 35 அல்லது 45 ரூபாய். இதையெல்லாம் நாங்கள் பாக்கும்போது இங்க இருந்து சாவுறத காட்டிலும் அங்க போயி சாவலாம் என்ற முடிவுக்கு நாங்களும் வரவேண்டியிருக்குது. ராஜீவ் காந்தி செத்தத கேட்டதும். நாங்கள் திடீரென்று சாமான் சட்டு. புள்ளை குட்டிகளை அள்ளிக் கொண்டு பொலிஸ்டேசனுக்கு ஓடினோம். போய் எங்களுக்கு பாதுகாப்பு கொடுங்க. ஊர்க்காரங்க எங்களை ஏதும் பண்ணிடப் போறாங்கன்னு: உடன அவன் ஒரு கிழட்டுப் பொலிச எங்களோட அனுப்பி திரும்ப கேம்பக்கு போகச் சொன்னான். நாங்கள் செத்தா சாவோம். இருந்தால் இருப்போம் என்று போனோம். அங்க காவலுக்கு வந்த கிழவன் குடிச்சிவிட்டு போதையில் நித்திரையாப் (தூங்கிப்) போனான். அங்க என்ன நடந்தாலும் தெரியாது. இப்ப எங்கள கவனமே எடுக்கிறான்கள் இல்லை.

வெளியால சாமான்கள் சரியான விலை: எங்களுக்கு ஒரு மாதிரி விக்கிறான்கள். ஊர்க்காரங்களுக்கு ஒரு மாதிரி விக்கிறான்கள். சாமான்களை விலை கூடினா எங்களை திட்டுகிறார்கள். நீங்கள் வந்தபிறகு தான் விலை கூடிப் போச்சு என்கிறார்கள். இந்த நிலைமைகளை பாக்கும்போது நாங்கள் ஊருக்கு போவதே சரியென பாக்குறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# ஆச்சியும், குளப்படிப் பெடியளும்.



எண்பதுக்கு முந்திய காலங்கள்.

அண்ணனும், தம்பியும் மண் விளையாடினார்கள். கிச்சு மாச்சுத் தம்பலம். அளாப்பினார்கள். சண்டை வந்தது. அப்பா அடித்தார்

• • • • • • • • • • • • • • • • • • • • • • • •

மாரி காலத்து வெள்ளத்தில் தெப்பல் அடித்தார்கள். காலில் நீர்ச் சிரங்குடன் கலங்கி வெள்ளத்தில் சின்னச் சின்னக் கல்லெறிந்து விளையாடினார்கள். தெத்தித் தெத்தி அழகழகாய் கல்லெறிந்தார்கள். அண்ணன் எறிந்த கல் தம்பியின் மண்டையை உடைத்தது. சண்டை நடந்தது. அப்பா அடித்தார்

• • • • • • • • • • • • • • • • • • • • • • • •

றேடியோப் பற்றி எடுத்து. காபனை அகற்றி. பற்றியின் வெள்ளித் தட்டினைப் பத்திரப்படுத்தினார்கள். இசைத்தட்டு றெடியாகிவிட்டது. அம்மாவின் சட்டை ஊசி களவெடுத்து. நெருப்புப் பெட்டியில் ஊசி செருகி பாட்டுப் பெட்டி செய்தார்கள். ஆச்சியின் எட்டு முழச் சேலையில் ஓரம் கிழித்து, மன்னெண்ணெய் புனல் எடுத்து, முற்றத்து மாமரத்தில் லவுஸ்பீக்கர் செய்தார்கள்.

ஊசி முனையில் இசைத்தட்டைச் சுற்றிவிட்டு ஆனந்தக் கூத்தாடினார்கள். கத்திக் கத்திப் பாடினார்கள்.

அப்பா வந்தார். ஆச்சியின் சேலை கிழித்தது அண்ணன். இல்லை தம்பி. இல்லையில்லை அண்ணன்தான். அப்பா அடித்தார்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • •

அண்ணன் தம்பியை அடித்தான்.

தம்பி அண்ணனை அடித்தான்.

அப்பாவும் அடித்தார். அடிக்கடி சண்டை நடந்தது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • •

அண்ணனும், தம்பியும் வயதுக்கு வந்துவிட்டார்கள். எண்பதுகளைத் தாண்டி தூரம் வந்துவிட்டார்கள்.

அண்ணன் கிளாத்தடி வேலி தாண்டிக் காதலித்தான். தம்பி சங்கக்கடை தாண்டிக் காதலித்தான். சந்தி சிரிச்சது. அப்பாவின் வேட்டி உரிஞ்சது. தலை குனிஞ்சு போனார். அப்பா தமிழ் வாத்தியார். ஊர் சிரித்தது.

மன்னெண்ணெய் புனல் கட்டி பாட்டுப் பாடிய முற்றத்து மாமரத்தில் கட்டிவைத்து கண்ணுக்கு பச்சைமிளகாய் தடவி, அடிஅடியென்று அப்பா அடித்தார். பூவரசம் தடி பஞ்சு மாதிரி வந்தது. அப்பா தமிழ் வாத்தியார். ஊர் மெச்சியது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • •

துப்பாக்கி வந்தது.

துப்பாக்கி வெடித்தது.

மின் கம்பத்தில், தெருவில் பிணங்கள்.

கோழிக் கள்ளரும், பிச்சைக் காரரும் துரோகிகளானார்கள்.

பிறகு காணவில்லை.

அண்ணன் ஒருநாள் மாயமாய் மறைந்து போனான்.

அப்பாவுக்கு பயம் வந்தது.

அம்மா ஓலமிட்டு அழுதாள்.

தம்பி இன்னொருநாள் மாயமானான்.

ஆச்சி ஒப்பாரி வைத்தாள்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • •

பக்கத்து வீட்டு பாலனின் சாரக்கட்டு மாறியது. மடி வீங்கியிருந்தது. பார்வை வெருட்டியது. சனத்துக்கு உதறல் எடுத்தது. பயம் மரியாதை. தானாகவே வந்தது. அம்மாவுக்கு பாலனைத் தெரியும். சாரத்தினை அவக்கென இழுத்தாள். ஊமல்க் கொட்டை ஒன்று விழுந்து.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • •

துப்பாக்கிகளின் சத்தம் பெருகியது. அண்ணனும், தம்பியும் இருட்டில் வந்தார்கள். உப்பிப் போய் இருந்தார்கள்.

அம்மாவுக்கும், அப்பாவுக்கும் ஆச்சிக்கும் அடையாளம் தெரியேல்லை. தங்கைதான் அடையாளம் சொன்னாள்.

அண்ணனின் முதுகில் பெரிய துப்பாக்கி ஒன்று. தம்பியின் இடுப்பில் சின்னத் துப்பாக்கி ஒன்று. அப்பாவுக்குப் பயம் தெளிந்தது. பதட்டம் வந்தது. பிள்ளைகளைப் பார்த்து பெருமைப்பட்டார். அம்மா ஒப்பாரி வைத்தாள். ஆச்சிக்கு ஒன்றும் விளங்கவில்லை.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • •

யுத்தம் வந்தது. யுத்தம் நடந்தது. தமிழ் வாத்தியாரின் மதிப்பு அந்தஸ்த்து உயர்ந்தது. அண்ணனும், தம்பியும் சிங்களத்தில் நிறையச் சுட்டார்கள். யுத்தம் நடந்துகொண்டேயிருந்தது. இடையில் தமிழில் சுட்டார்கள். திடீரென்று நிறையச் சுட்டார்கள்.

அண்ணன் காதலியின் அப்பாவைச் சுட்டான்.

பாலன் அப்பாவைச் சுட்டான்.

தம்பி பாலனைச் சுட்டான்.

அண்ணன் தம்பியைச் சுட்டான்.

யாரோ அண்ணனையும் சுட்டார்கள்.

அம்மா செத்துப் போனாள்.

ஆச்சி பாவம். முருகா! முருகா!! முருகனைக் கூப்பிட்டாள்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • •


தங்கையின் குழந்தையும் இன்னொரு குழந்தையும் தடி வைத்து விளையாடினார்கள். தடியை துப்பாக்கிபோல் ஒப்பனை செய்து சுட்டார்கள். பொய்க்கு சுட்டார்கள். பொய்க்குச் செத்தார்கள்.

ஆச்சிக்கு வடைக்கதை நரிக்கதை தெரியும். வடைக்கதை, நரிக்கதை கேட்க யாரும் வரவில்லை. ஆச்சிக்கு துப்பாக்கி வந்த கதை தெரியாது. ஒப்பாரி சொல்லி அழுவதை நிறுத்திவிட்டாள்.

ஓரம் கிழிந்த சேலையைப் பார்த்து வெதும்பி வெதும்பி அழுது கொண்டிருந்தாள்.

யுத்தம் நடந்து கொண்டிருந்தது.

- மகிந்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உலகப் பொலிஸ் வேண்டுமா ?

யூகோஸ்லாவிய தேசிய இனங்களுக்கிடையிலான மோதல்களைத் "தீர்த்து" வைக்க ஐக்கியநாடுகள் சபையின் "சமாதானப்படை" சென்றுள்ளது.

எல்சல்வடோரின் நீண்டகால உள்நாட்டுப் போரை "முடிவுக்குக்" கொண்டுவர ஐ.நா.சபையின் ச.படை சென்றுள்ளது.

சோவியத் யூனியனில் இணைந்திருந்த நாடுகளின் தேசிய இனங்களைக் "காப்பாற்ற" ஐ.நா.சபையின் ச.படை செல்லவேண்டுமென கோரிக்கைகள் எழுந்துள்ளன.

'நீலத் தொப்பி' இராணுவம் என்றழைக்கப்படும் ஐ.நா.சபையின் ச.படைக்கு உலகெங்கிலும் சமாதானத்தை நிலைநாட்டுவதில் அப்படியென்ன அக்கறை?!

"அமைதிப்படை" என்ற பெயரில் இலங்கைக்குள் இந்திய இராணுவம் வந்து இந்திய அரசின் நோக்கத்தை எப்படி நிறைவேற்ற முயன்றது என்பதில் எமக்குப் படிப்பினைகள் உண்டு. அப்படியாயின் வறியநாடுகளைச் சுரண்டிக் கொழுக்கும் அமெரிக்க, மேற்கைரோப்பிய இராணுவங்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள ஐ.நா.சபையின் ச.படை ஒரு நாட்டுக்குள் புகுந்தால் யாரின் நோக்கங்கள் நிறைவேறும் என்பதும் வெளிப்படையே.

ஆயுத விற்பனையில் முதன்மை வகிக்கும் அமெரிக்க, மேற்கைரோப்பிய நாடுகளுக்குள் நுழைந்து, முழு உலகுக்குமே அச்சுறுத்தலான அணு, உயிரியல், இரசாயன ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுவதை இந்த ஐ.நா. சபையின் ச.படை அழிக்காது.

அமெரிக்கா பனாமாவுக்கும், பிரிட்டன் போக்லாந்துக்கும், பிரான்ஸ் சார்ட்டுக்கும் படையெடுத்துப் போய் தமது ஆதிக்க வெறியைக் காட்டும் போது இந்த ஐ.நா.சபையின் ச.படை தடுக்காது.

மூன்றாமுலக நாடுகளில் கிளர்ந்தெழும் விடுதலைப் போராட்டங்களை நசுக்க அந் நாடுகளின் அரசுகளுக்கும், எதிர்ப்புரட்சிகர சக்திகளுக்கும் முதலாளித்துவ, ஏகாதிபத்திய நாடுகள் ஆயுத-நிதி உதவி வழங்குவதை இந்த ஐ.நா.சபையின் ச.படை கண்டுகொள்ளாது.

ஆனால், விடுதலைப் போராளிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையவும், ஆயுதப் போராட்டத்தை பாராளுமன்றத்திற்கான சமரசமாக்கவும், போராளிகளையும், அரசுகளையும், தமது தலைமைத்துவத்தின் கண்காணிப்பின் கீழ் வைத்திருக்கவும் ஐ.நா.சபையின் ச.படை வந்துவிடும்!

தம்மால் விதிக்கப்பட்ட தடைகளால் உண்டான பட்டினி, நோய், வறுமை காரணமாக ஈராக்கில் தொடர்ந்தும் பல ஆயிரக்கணக்கில் பச்சிளங் குழந்தைகள் இறந்து கொண்டிருப்பதைப் பற்றியோ, ஈராக் பகுதிகளிலிருக்கும் குர்திஷ் மக்கள் துருக்கி, ஈரான் அரசுகளால் குண்டுவீசி கொல்லப்படுவதைப் பற்றியோ அலட்டிக்கொள்ளாத ஐ.நா.சபை, சதாம் முழு ஆயுதங்களையும் அழிக்க அனுமதிக்காவிடின் மீண்டும் போர் தொடுக்க வேண்டிவரும் என ஆணவமாகக் கூறுவதுதான் "சமாதானம்" பற்றிய ஐ.நா.சபையின் உண்மை விளக்கமாகும்.

மக்கள் பலத்துடன் முன்னெடுக்கப்படும் விடுதலைப் போராட்டங்களுக்கு இந்தப் பொலிஸ்காரர்களின் "தயவு" தேவைப்படாது.

## சுயநிர்ணய உரிமை

முஸ்லீம் மக்கள் மீது புலிகள் மீண்டும் தமது கோரப் பற்களைப் பதித்துள்ளன. அழிஞ்சிப்பத்தை கிராமத்தில் தூங்கிக் கொண்டிருந்த முஸ்லீம் மக்கள் 54 பேர் - ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் - கத்தி, வாள் மற்றும் கூரான ஆயுதங்களால் கொத்திக் குதறப்பட்டுள்ளனர். பச்சிளம் குழந்தைகளைக் கூட உயிருடன் விட்டு வைக்கவில்லை. புலிகள் அல்லவா. தலையை வெட்டி எடுத்துக் கொண்டு போய்க் காட்டுக்குள் எறிந்துள்ளன.

இதற்குப் பதிலடியாக இக் கிராமத்தை அண்மிய கரபொல, முதுகல கிராமத்தைச் சேர்ந்த அப்பாவித் தமிழ் மக்கள் 53 பேர் முஸ்லீம் வெறியர்களினால் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்கள். இவர்களிடமிருந்தும் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் மட்டுமல்ல, பாலகர்களும் தப்பவில்லை.

இரண்டு பக்கத்து வெறியர்களாலும் மொத்தம் 50 கைக் குழந்தைகள் கண்டதுண்டமாக்கப்பட்டுள்ளார்கள்.

ஏறாவூர், காத்தான்குடிப் பள்ளிவாசல்களுக்குள் வைத்து முஸ்லீம் மக்களைச் சுட்டுக் கொன்றமை, வடக்கிலிருந்து உடமைகளைக் வழிப்பறி செய்து முஸ்லீம் மக்களை விரட்டியமை, சென்ற மாதத்திய இக் கொலைகள் என்பன காட்டுவது என்னவென்றால், தமிழர்கள் என்று தன்னிச்சையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட முஸ்லீம்களை தனி இனமாகத்தான் புலிகள் கருதுகின்றன என்பதையே!

தமிழர்களின் பிரிந்து போவதுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காது, அதே நேரம் தமிழர்களை தனி இனமாகவே நடாத்தி அவர்களின் கலாச்சாரங்களை, இன அடையாளங்களை, பொருளாதாரத்தை அழிப்பதன் மூலமும், பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து விரட்டுவதன் மூலமும், அப்பாவி மக்களையும், போராளிகளையும் கொன்றும், சிறையிலடைத்தும், துன்புறுத்தியும் கோரத் தாண்டவம் ஆடுவதன் மூலமும் இலங்கை அரசு தனது பௌத்த-சிங்கள இனவெறியைக் காட்டுகிறது என்றால், புலியும் அவற்றையேதான் செய்து தமிழ் இனவெறியைக் காட்டுகிறது.

தமிழர்களுடன் தங்கள் பாரம்பரிய பிரதேசங்களில் வாழ்ந்து, இலங்கை-இந்தியா இராணுவங்களிடமிருந்து தமிழ் மக்களையும், போராளிகளையும் காப்பாற்றி, வடக்கு-கிழக்கு இணைப்புக்கு ஆதரவு என்று முஸ்லீம் மக்கள் தமிழர்களுடன் கொண்டிருந்த சகோதர உறவைத் தமிழ் இனவாதம் துண்டித்து, சிறுபான்மை இனங்களை தனிமைப்படுத்தி பகையாளிகளாக்கியுள்ளது. இதன் பெரும் பங்கு புலிகளையே சாரும்.

முஸ்லீம் மக்களுடனான சகோதரத்துவத்தை விரும்புகின்ற தமிழர்கள் இன்றைய நிலையில் செய்யவேண்டியது முஸ்லீம் மக்களின் தனித்துவத்தையும், பிரிந்து போவதுடன் கூடிய சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிப்பதுடன், அவர்களின் பாதுகாப்புக்கும், ஜனநாயக உரிமைகளுக்குமாகப் போராடுவதாகும். இதுவே இன வெறியர்களால் சாகடிக்கப்பட்ட நம்பிக்கையையும், சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்பும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வதைகளின் கதைகள்

ஈழ தேச விடுதலைப்போராட்டத்தை காட்டிக்கொடுத்து எதிரியின் பக்கத்தில் சார்ந்து நிற்கும் ENDLF, TELO EROS , EPRLF , PLOT . போன்ற உதிரிக்குழுக்களின் மத்தியில் அரசுக்கு எதிராக போராடுவது போன்ற ஒரு மாயையை ஏற்படுத்தும் LTTE என்ற ஆயுதக்குழுவின் நடவடிக்கைகள் இன்று தமிழ் ஈழத்திலும் மொத்த இலங்கையினதும் தலைவிதியை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆயிரக்கணக்கான மக்களையும், போராளிகளையும் பலி கொண்ட இந்தப்போராட்டமானது: இன்று தனது திசையை இழந்து போய் நிற்கின்றது! விடுதலைக்கு பதிலாக எலும்பையையும், சதையையும் மட்டுமே விளைவாக்கி கொண்டுள்ளது! எமது தேசத்தின் அழகிய தெருக்களில் குருதிச்சுவடுகளை மட்டுமே காணமுடிகின்றது! மனிதர்களுக்குப்பதில் துப்பாக்கிகளும், வெடிகுண்டுகளுமே! அங்கே இழப்பதற்கு எதுவுமில்லை! உயிர்களைத்தவிர!

பெறுமதி மிக்க உயிர்களும், ஆற்றல் மிக்க கருத்துக்களும் முளைத்தவுடனேயே கிள்ளி எறியப் படுகின்றன. சிந்தித்தவர்கள் என்ற ஒரே காரணத்தினால் புதைக்கப்பட்டவர்கள் ; விடுதலை உணர்வுடன் மாற்று இயக்கத்தில் இணைந்திருந்தவர்கள் என்ற ஒரே காரணத்தினால் கொல்லப் பட்டவர்கள்..... என்று ஆயிரக்கணக்கில் எமக்குள்ளேயே பலியெடுக்கப்படுகின்றார்கள். இரவோடு இரவாக தீமூட்டிக்கொழுத்தப்படுகின்றார்கள். கைது செய்து இழுத்துச்செல்லப்பட்டு மிருகத்தனமாக சித்திரவை செய்யப்படுகின்றார்கள். LTTE என்ற இயக்கத்தின் ஆதரவாளர்களையும், உறுப்பினர்களையும் தவிர மற்றவர்கள் மனித ஜீவன்களாகவே மதிக்கப்படுவதில்லை. LTTE என்ற இயக்கத்தில் ஒரு தனிமனிதனின் அல்லது சில மனிதர்களின் திடீர் முடிவுகள் மட்டுமே எத்தனை உயிர்களைப்பலி கொண்டு விட்டன !

தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள் என்று அனைத்தையும் துறந்து விடுதலைக்காக உயிர் கொடுக்கத்துணிகின்ற ஒருவனுடைய இழப்பு எல்லாவற்றிலும் மேலானது ! ஆனால் அந்த இழப்பு ஒரு சில தனிநபர்களின் சர்வாதிகாரத்திற்கும், மேலும் ஆயிரக்கணக்கானவர்களை கொன்று குவிப்பதற்கும் மட்டுமே பயன் படுமேயானால் அந்த இழப்பு தேவையற்றது! அது அநீதியானது ! விமர்சனமே போராட்டத்தை செழுமைப்படுத்தும். ஆனால் விமர்சிக்கப்பட்டவர்கள் எல்லாம் சுடுகாட்டில் சாம்பலாக்கப்பட்டால், நிலக்கீழ் சிறைகளில் சித்திரவதை செய்யப்பட்டால் எமது போராட்டம் திசை தெரியாத இருளினுள் இருந்து விடுபடவே முடியாதது. கருத்துச்சுதந்திரத்திற்காகவே எதிரிக்கு எதிராகப்போராடத்தொடங்கினோம். ஆனால் இன்று அதே சுதந்திரம் எம்மவர்களால் நசுக்கப்படுகின்றது. பேசவும்,எழுதவும், வாழவும் சுதந்திரம் கேட்டு துப்பாக்கிகள் எழுந்தன ! ஆனால் அதே சுதந்திரம் இன்று முன்பைவிட மோசமாக நசுக்கப்படுகின்றது என்றால் சுதந்திர ஈழம் என்பதன் உண்மையான அர்த்தம் தான் என்ன ? எதற்காக ஈழம் ? இதுவரை இழந்தது எல்லாம் எதற்காக ? எமது இனத்தின் மிருகத்தனத்தையும், காட்டுமிராண்டித்தனத்தையும் சர்வதேசங்களுக்கும் அம்பலப்படுத்தவா ?

உண்மையாகவே விடுதலைக்கு என்று புறப்பட்ட ஆயிரக்கணக்கான போராளிகளின் உணர்வுகள் பெறுமதி மிக்கவை ! உயிர்கள் மேலானவை ! இவைகள் எல்லாம் ஒரு சில தலைவர்களின் தனிப்பட்ட புகழுக்கும், அதிகாரத்திற்காகவும் மட்டும் தானா ? யாழ்மாவட்ட முகாமையாளரிலிருந்து யாழ் போதனா வைத்திய சாலையின் சவக்காலையின் பாதுகாவலர்கள் வரையாக 5000 பேர் வரை சிறைச்சாலையில், மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்படுகின்றார்கள்

எமது தேசத்து மக்களின் வரிப்பணத்தில் இலவசக்கல்வி கற்றவர்கள், அந்த மக்களின் உழைப்பில் பங்கு கொண்டவர்கள் என்ற வகையில் இந்த இன அழிப்புக்கு எதிராக நாம் என்ன செய்யப்போகின்றோம் ?

போராட்டம் அரசுக்கு எதிரானது மட்டுமல்ல !
ஆராயகத்திற்கும் எதிரானதே !
நாம் சந்திக்கின்ற ஒவ்வொரு LTTE ஆதரவாளர்களையும் இந்தக்கேள்வியை கேட்போம் !
இந்தக்கோசங்களை முன் வைப்போம் !

**இலங்கை அரசே !!!**
**அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய் !**
**தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி !**

**விடுதலைப்புலிகளே !!!**
**அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய் !**
**மக்களுக்கு கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரங்களை வழங்கு !**

*வெளியீடு - தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம் (சமர்)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்